ISBN:978-81-687272-1-2

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



பண்டிதமணி
மு கதிரேச செட்டியார்

செந்தமிழறிஞர்கள் 108

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in



https://www.annacentenarylibrary.org/pages/view/50.%20%20'%E0%AE%AA%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%A3%E0%AE%BF'%20%E0%AE%AE%E0%AF%81.%E0%AE%95%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%87%E0%AE%9A%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D

செந்தமிழ்ச்சிற்பிகள்

'பண்டிதமணி' மு.கதிரேசனார் (1881 - 1953)



பண்டிதமணி என அழைக்கப்பட்ட மு. கதிரேசச் செட்டியார் ஏழு மாதங்கள் கூட பள்ளியில் படிக்காமல் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய பெருமைக்கு உரியவர். வடமொழி நூல்கள் பலவற்றை மொழி பெயர்த்தவர். பல தமிழறிஞர்களுக்குப் பாடம் சொன்னவர். சிறந்த சொற்பொழிவாளர். இரு பொருள் படப் பேசுவதில் வல்லவர். தமிழாய்வு செய்து தமிழ்த்தொண்டாற்றியவர்.

பிறப்பும் கல்வியும்

கதிரேச செட்டியார் மகிபாலன் பட்டியில் முத்துகருப்பன், சிவப்பி ஆச்சி அவர்களுக்கு 16-09-1881 அன்று பிறந்தார். சிறு வயதிலேயே இளம்பிள்ளை வாத நோயால் துன்புற்றார். தந்தை மலேசியா இலங்கை முதலிய நாடுகளுக்கு வாணிகம் செய்யச் சென்றதால் இவர் தனது ஏழாம் வயதில் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் சேர்ந்தார். அப்பொழுதே ஆத்திசூடி, உலக நீதி ஆகியவற்றின் சொல்லழகு இவரைக் கவர்ந்ததால்

படிப்படியாகத் திருத்தொண்டர் புராணம், கம்பராமாயணம், சில பிள்ளைத்தமிழ் நூல்கள் ஆகியவற்றைத் தாமே ஓதி உணர்ந்தார்.

இளமை

அக்காலத்தில் இருந்த தம் குல வழக்கப்படி தனது 11-ஆம் வயதில் பொருளீட்டுவதற்காக இலங்கை சென்றார். இலங்கையின் எழிலில் அவர் மனம் பறி கொடுத்த நேரத்தில் அவருக்கு மீண்டும் வாத நோயின் கொடுமை தலைகாட்டியது. அப்பொழுது தனது தந்தையின் திடீர் மரணம் அவருக்கு மேலும் அதிர்ச்சி அளித்தது. உடலும் உள்ளமும் மிகவும் நலிவுற்ற நிலையில் தனது 14-ஆம் வயதில் அவர் தாய்நாடு திரும்பினார். நோய் தீவிரமானதால் ஊன்று கோலின்றி நடக்க முடியாத நிலைக்கு ஆளானார்.

தமிழின் மீதுள்ள ஆர்வம் காரணமாகத் தனது நோயின் காரணமாக நடமாட முடியாமையால் கிடைத்த ஓய்வு நேரத்தில் தமிழ் நூல்களை ஊன்றிக் கற்றார். சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரிய புராணம், திருவாசகம், புறநானூறு, திருக்குறள், கம்பராமாயணம் ஆகியவற்றை இவர் ஆசிரியர் இல்லாமலே ஆழ்ந்து கற்றார். தொல்காப்பியத்தையும் அதற்கான சேனாவரையரின் உரையையும் தன் ஆருயிர் நண்பரான அரசஞ்சண்முகனாரிடம் பாடம் கேட்டார்.

இலக்கியப்பணி

அரசஞ்சண்முகனாரின் மூலம் மதுரை 'வித்யா பானு' அச்சகத்தின் உரிமையாளரான மு. ரா. கந்தசாமிக் கவிராயரின் நட்பு கதிரேசனாருக்குக் கிடைத்தது. இதன் பயனாய் இவர் வித்யாபாநு இதழுக்குப் பல அரிய தமிழ் கட்டுரைகள் எழுதினார்.

இலக்கிய நட்பும் சொற்பொழிவும்

இக்காலத்தில் கதிரேசருக்கு, தமிழ்ப் பெருங்கவி இராவ் சாகிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார், பசுமலை, நாவலர் ச. சோமசுந்தர பாரதி, ரா இராகவையங்கார் , மறைமலை அடிகள், ஞானியார் ஆகியோருடன் நட்பு ஏற்பட்டது. சொல்லழகும் பொருளழகும் ஒருங்கே அமையப்பெற்ற ஞானியாரின் சொற்பொழிவுகளால்

கவரப்பட்ட கதிரேசனார் தாமும் சொற்பொழிவாற்ற வேண்டுமென ஆர்வம் கொண்டார். இந்த ஆர்வம் அவரை ஒரு முதல் தர சொற்பொழிவாளராக ஆக்கியது.

பாண்டித்துரை தேவரும் பண்டித மணியும்

கதிரேசனாரின் நண்பரான ரா. ராகவையங்கார் இவரைப் பாண்டித்துரைத் தேவருக்கு அறிமுகம் செய்தார். மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் அமைக்க வேண்டும் எனப் பாண்டித்துரைத் தேவர் முயன்று கொண்டிருந்த காலம் அது. கதிரேசனாரின் புலமைக்கு மரியாதை செலுத்த விரும்பிய தேவர் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கி வைத்த புலவர்களில் ஒருவராகக் கதிரேசனாரையும் சேர்த்தார்.

வடமொழிப் புலமை

தமிழ் மொழியில் பெரும் புலமை பெற்றிருந்த கதிரேசனார் வட மொழியிலும் புலமை பெற்றால் தன் புலமை முழுமை அடையும் என எண்ணி தருவை. நாராயண சாஸ்திரியாரிடம் ஐந்து ஆண்டுகள் வடமொழியைக் கற்றார். தனது இருமொழிப் புலமையால் ஆய்ந்து தமிழ் மற்றொரு மொழியினின்று தோன்றியதென்றால் பிறிதின் சார்பின்றி நடைபெறாதென்றாதல் கூறுவார், உண்மை ஆராய்ச்சி இலராவர். ஒரு சில வட சொற்கள் உண்மை பற்றித் தமிழ் மொழியை வட மொழியினின்றும் தோன்றியதென்றால் பொருந்தாத ஒன்றாகும் என்றும் தமக்குரிய மொழியைப் புறக்கணித்து வேற்று மொழியில் எத்துணை மேற்சென்றாலும் மொழியறிவால் பெறும் பயன் முற்றும் எய்தாது என்றும் கூறியுள்ளார்.

தமிழ்த்தொண்டு

கதிரேசனாரின் துவக்க காலத் தமிழ்த் தொண்டில் குறிப்பிடத்தக்கது மேலைச் சிவபுரியில் இவர் அமைத்து நடத்திய 'சன்மார்க்க சபை' ஆகும். பொருளியலில் காட்டிய ஆர்வத்தை நகரத்தார் கல்வியில் காட்டாதிருந்த அக்காலத்தில் சன்மார்க்க சபையின் மூலம் அவ்வினத்தாரிடம் தமிழார்வத்தைத் தூண்டி வளர்த்த பெருமை கதிரேசனாரையே சாரும். இதற்கு பொருளுதவி செய்தவர் பழநியப்ப செட்டியார் என்ற பெரும் செல்வராவார். மேலும் இச்சபையின் பிரிவுகளாக 'கணேசர் செந்தமிழ்க் கலாசாலை',

'தொல்காப்பியனார் நூல் நிலையம்' ஆகியவை ஏற்படுத்தப்பட்டு சிறப்பாக நடைபெற்றன. இச்சபை பல பேரறிஞர்கள் முன்னிலையில் இவரின் தமிழ்த்தொண்டினைப் பாராட்டி பண்டிதமணி என்ற பட்டத்தை வழங்கியது அக்காலத்தில் வாழ்ந்த பெரும் புலவர்கள் இச்சபையில் சொற்பொழிவாற்றியுள்ளனர். இவர்களில் திரு. வி. க., உ. வே. சாமிநாதைய்யர், மகாவித்துவான் ரா. ராகவ ஐயங்கார், கா. சுப்பிரமணியப் பிள்ளை, ந. மு. வேங்கடசாமி நாட்டார், சுவாமி விபுலானந்தர், உமாமகேசுவரம் பிள்ளை, கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இச்சபையின் ஆதரவால் தான் பண்டிதமணி அவர்கள் 'கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தை' தமிழில் மொழிபெயர்க்கத் துவங்கினார். ஆனால், இப்பணி இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய போதுதான் முடிவுற்றது. இச்சபையின் சார்பாகத் துவக்கப்பட்ட 'கணேசர் செந்தமிழ்க் கல்லூரி', சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு சிறப்புடன் நடந்து இன்றும் இவரின் தமிழ்த்தொண்டினை நினைவூட்டும் சின்னமாக விளங்குகிறது.

சமயத்தொண்டு

பண்டித மணி சமயத்துறையில் மிகுந்த ஈடுபாடு மிக்கவர். மணிவாசகப் பெருமானிடம் கொண்டிருந்த ஈடுபாடு காரணமாக அண்ணமலை நகரில் இருந்த போது 'மணிவாசக மன்றம் 'என்ற பேரவையைத் தோற்றுவித்தார். அவர் எழுதியுள்ள ' சமயக் கட்டுரைகள் '(உரைநடைக் கோவை-முதற்பகுதி) இவரின் சமய அறிவின் மேன்மை, நுண்மை, சமய விரிவு ஆகியவற்றைக் காட்டும். கதிரேசனாரின் பெரும் தொண்டுகளில் மணிமகுடமாக விளங்குவது அவர் திருவாசகத்திற்கு எழுதிய விளக்கவுரை ஆகும். வாழ்நாளின் இறுதிக் காலத்தில் படுத்த படுக்கையாய்க் கிடக்கும் போதும் திருவாசகத்திற்கு உரை எழுதுவதில் பெரும் அமைதி கண்டார். இவரது உரை 1950 ஆம் ஆண்டு, தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரின் ஆராய்ச்சித் துறைக்கான பரிசினைப் பெற்றது.

செட்டிநாட்டரசரும் கதிரேசனாரும்

கதிரேசனாரிடம் நட்பு கொண்டு பழகியவர்களில் செட்டிநாட்டரசரான அண்ணாமலைச் செட்டியாரும் ஒருவர். கதிரேசனாரிடம்

அண்ணாமலைச் செட்டியார் வைத்திருந்த பேரன்பும் பெருமதிப்பும் கதிரேசனாரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பணியை மேற்கொள்ளச் செய்தது. அவரின் விடாப்பிடியான வேண்டுகோளின் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பணி செய்தார். அக்காலத்தில் இவருடன் பணியாற்றியவர் சுப்பிரமணியப் பிள்ளை. பண்டிதமணி பல்கலைக்கழகத்தில் ஆசிரியப் பணியை மேற்கொண்ட போது அவருக்கு வயது 53 ஆகும். முதிர்ந்த அறிவும் பழுத்த அனுபவமும் பாடம் சொல்லும் திறனும் மாணவர்களிடம் மிகுந்த தமிழார்வத்தைத் தூண்டின. இவரிடம் பாடம் கேட்பதற்காகவே சிலர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தனர். இவரிடம் பயின்று பிற்காலத்தில் சிறப்பு பெற்ற சிலர்:

அ. சிதம்பரநாதச் செட்டியார்

எஸ். உருத்திரபதி

மீனாட்சி சுந்தரனார்

பூ. ஆலால சுந்தரம் செட்டியார்

சரவண ஆறுமுக முதலியார்

ஆ. முத்துசிவன்

வ. சுப மாணிக்கம்

ரம்போலா மஸ்கரனேசு

இரா. நெடுஞ்செழியன்

க. அன்பழகன்

கோவிந்தராசனார்

இராசாமணி அம்மையார்

.இராசரத்தினம் அம்மையார்

தம் தமிழ் புலமையால் அனைவரையும் கட்டிய பண்டிதமணி 1946-ல் உடல் நலக் குறைவால் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வு பெற்றார்.

தன்மானமும் பட்டமும்

தமிழறிவு மிக்க வறுமையில் வாடிய புலவர்களை ஆதரிப்பதில் கதிரேசனார் வள்ளன்மை மிக்கவராக விளங்கினார். இவருடைய மனைவி மீனாட்சி ஆச்சியும் இவரின் பொதுத் தொண்டிற்குத் துணையாய் இருந்தார். பண்டிதமணி தன்மானத்தைக் காப்பதில் சிங்கமாக விளங்கினார். இவருக்கு பட்டம் வழங்கிச் சிறப்பிக்க அரசாங்கம் எண்ணியது.'மகாமகோபாத்தியாயப் பட்டம்' ஒரு குறிப்பிட்ட இனத்தவர்க்கே உரியது என எண்ணி அதற்குப் பதிலாக 'இராவ் பகதூர்' என்ற பட்டம் வழங்க விரும்பியது. அரசியலாரின் குறுகிய நோக்கத்தினையும் அறியாமையையும் அறிந்த பண்டிதமணி ' இராவ் பகதூர்' பட்டத்தை ஏற்க மறுத்தார். இவரின் தன்மானம் காக்கப்பட்டதோடு மட்டுமன்றி, அவரின் துணிவுக்குப் பரிசாக 'மகாமகோபாத்தியாயப் பட்டம்' அவரை நாடி வந்தது.

எழுதிய நூல்கள்

மொழிபெயர்ப்பு நூல்கள்

பல வடமொழி நூல்களை இவர் மொழி பெயர்த்துள்ளார். இவர் மொழிபெயர்த்த நூல்கள்

பிராதபருத்தரீயம்

மாலதி மாதவம்

சுக்கிர நீதி

உதயணன் சரிதை

சுலோசனை

மண்ணியல் சிறுதேர் (மிருச்சகடிகம்)

கௌடலீயம் பொருணூல் (கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்)

மிருச்சகடிகம்

இரசங்காதாரம்

இவற்றுள் பிராதபருத்தரீயம், மாலதிமாதவம் ஆகியவை அச்சிடப்படவில்லை. சுக்கிராச்சாரியார் என்பவர் எழுதிய சுக்கிரநீதி ஒரு நீதி நூல் ஆகும். அசோகன், சந்திரகுப்தன் ஆகிய மன்னர்கள் காலத்தில் நிலவிய நீதி, ஆட்சிமுறைகளை இந்நூல் விளக்குகிறது. இந்நூல் குறளின் கருத்துகள் பலவற்றோடு ஒத்த நீதிகளை உள்ளடக்கிய பெருமை வாய்ந்தது.

உரைநடைக்கோவை 1

உரைநடைக்கோவை 2

நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு

பண்டிதமணி பாடல்கள்

பண்டிதமணி கடிதங்கள்

பதிற்றுப் பத்தந்தாதி

கதிர்மணி விளக்கம் (திருவாசக விளக்கம்)

மறைவு

பண்டிதமணி கதிரேசன் செட்டியார் இரத்தக் கொதிப்பின் காரணமாக மிகவும் துன்புற்றார். நோயின் தீவிரத்தால் 1953 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் நாள் காலமானார்.

(😊)(😊) @@@@@@@@@@@@ (😊)(😊)

	பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார்



பிறப்பு	(செப்டம்பர் 16, 1881 மகிபாலன் பட்டி, சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு
இறப்பு	அக்டோபர் 24, 1953 (அகவை 72)
சமயம்	இந்து
பெற்றோர்	முத்துகருப்பன் செட்டியார் , சிவப்பி ஆச்சி
வாழ்க்கைத் துணை	மீனாட்சி ஆச்சி

பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார்

பா.சு. ரமணன்

https://s-pasupathy.blogspot.com/2016/10/1_24.html



அக்டோபர் 24


பண்டிதமணி கதிரேசன் செட்டியாரின் நினைவு தினம்.

============

தன்னலம் கருதாது சிவத்தொண்டும் தமிழ்த் தொண்டும் புரிந்தவர்களுள் தலையாகக் குறிப்பிடத் தகுந்தவர்கள் நகரத்தார்கள். ஆலயப் பணியோடு அறிவுக் கண் திறக்கும் தமிழ்ப் பணியும் ஆற்றிய அப்பெருமக்களுள் குறிப்பிடத்தகுந்த ஒருவர் பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார்.

"பண்டிதர்கள் உலகிற் பலர் இருப்பினும் அவருள் நம் கதிரேசனார் மணி போலத் திகழ்கின்றார். ஆதலின் அறிஞர்களாகிய உங்கள் முன்னிலையில் இக்கதிரேசனார்க்கு யாம் பண்டிதமணி என்னும் i சிறப்புப் பெயரைச் சூட்டுகின்றோம்" என்று மொழிந்து கதிரேசன் செட்டியாருக்கு அச்சிறப்புப் பெயரைச் சூட்டியவர் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர்.

"என்னைப் பாராட்டிய முதற்புலவர் பண்டிதமணியே. அதன் பயனாகவே, அவர் தந்த ஊக்கத்தினாலேயே என்னால் "தசரதன் குறையும் கைகேயி நிறையும்' என்ற நூலை எழுத முடிந்தது" என்கிறார் நாவலர் சோமசுந்தர பாரதியார். இவ்வாறு தம் காலத்தே வாழ்ந்த தமிழறிஞர்கள் பலராலும் போற்றப்பட்ட கதிரேசன் செட்டியார், செட்டிநாட்டைச் சேர்ந்த மகிபாலன்பட்டி என்னும் சிற்றூரில் முத்துக்கருப்ப செட்டியாருக்கும், சிகப்பி ஆச்சிக்கும், அக்டோபர் 18, 1881ம் ஆண்டில் மகவாகத் தோன்றியவர். (இவ்வூர் சங்க காலப் புலவர் கணியன் பூங்குன்றனார் பிறந்து வாழ்ந்த ஊர்) இவரது மூன்றாம் வயதில் இளம் பிள்ளை வாதம் தாக்கிற்று. அதனால் பிற சிறுவர்கள் போல் பள்ளிக்குச் சென்று கல்வி கற்க முடியவில்லை. ஏழாம் வயதில் அவரை அருகில் உள்ள திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தனர். ஆனால் அதுவும் சுமார் ஏழு மாதங்களே நீடித்தது. திரைகடல் ஓடித் திரவியம் தேடுவதில்தான் அக்கால நகரத்தாரில் பலருக்கு ஆர்வம் இருந்ததே தவிர, படிப்பில் நாட்டமில்லை. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்பதே அவர்களது எண்ணமாக இருந்தது. அதனால் பண்டிதமணியின் திண்ணைப் பள்ளிக் கூடப் படிப்பு பாதியிலே நின்று போனது



இதைப் பற்றி பண்டிதமணி, "யான் ஆறேழ் ஆண்டு அகவை உடையனாக இருக்கும்பொழுது தான் திண்ணைப் பள்ளிக்கூடத்திலே கல்வி பயின்றேன். அறிவார்ந்த சான்றோர்கள் நிரம்பிய அப்பள்ளியிலே பாடமாக உள்ள ஆத்திசூடி, உலகநீதி முதலிய சிறு நூல்களை யான் பயில நேர்ந்தபோது அச்சிறுசிறு வாக்குகளின் அழகு நெஞ்சத்தை கொள்ளை கொண்டது. 'ஆ' இவைகள் எத்துணை அழகாகவும் இனிமையாகவும் அமைக்கப்பட்டுள்ளன' என்று அடிக்கடி வியப்படைவேன். அவற்றில் ஏதோவொரு தெய்வத்தன்மை அமைந்திருப்பதாகவே தோன்றிற்று. மேலும் அவற்றின் பொருளும் எனக்குத் தெளிவாகவே புலப்பட்டன. அவற்றை ஆர்வத்தோடு ஒரு சில திங்களிலேயே கற்று மனப்பாடஞ் செய்து கொண்டேன். அக்காலத்தே நூல்கள் கிடைப்பதே அருமை. அவ்வாறு அரிதிற் கிடைத்த திருத்தொண்டர் புராணம், கம்பராமாயணம் போன்ற நூல்களின் உயரிய செய்யுட்களும், ஆசிரியரின் உதவியின்றியே யான் பயின்ற பொழுதும் பழம்பாடம் போன்று எனக்கு விளக்கமாகப் பொருள் புலப்பட்டது" என்கிறார்.

இதிலிருந்தே பண்டிதமணியின் அறிவாற்றலையும், கற்றலில் அவருக்கிருந்த ஆர்வத்தையும் அறியலாம். குடும்பச் சூழலால் அவர் பதினோராவது வயதில் வியாபார நிமித்தமாக இலங்கைக்குச் செல்ல நேர்ந்தது. அங்கு மூன்று ஆண்டுகள் தங்கிப் பணியாற்றியவர், தந்தை இறந்துவிடவே தாய்நாட்டுக்குத் திரும்பினார். குடும்பப் பொறுப்பை ஏற்றார். ஆனால் மீண்டும் இளம்பிள்ளை வாதத்தால் அவரது உடல் மேலும் நலிவுற்றது. ஊன்றுகோலின் உதவியில்லாமல் நிற்கவோ, நடக்கவோ இயலாத நிலை ஏற்பட்டது. ஆனாலும் உள்ளம் தளராது தாமே இலக்கிய நூல்களைப் பயில ஆரம்பித்தார்.

ஆனால் இலக்கண நூல்களைப் பயில்வது மிகக் கடினமாக இருந்தது. அந்நிலையில் முதுபெரும் புலவர் மதுரை அரசன் சண்முகனாரின் நட்பு அவருக்குக் கிடைத்தது. பண்டிதமணியின் மீது பேரன்பு பூண்ட அரசன் சண்முகனார், பண்டிதமணியின் இல்லத்திலேயே தங்கி அவருக்கு இலக்கணத்தில் இருந்த ஐயங்களைப் போக்கியருளினார். "இப்புலவர் பெருமானின் நட்புக் கிடைத்ததன் பயனாகத் தொல்காப்பிய முதலிய

இயல்நூல்களும் எனக்கு இலக்கியம் போன்று இன்புற்றுப் பயிலும் இனிய நூல்களாயின" என்று குறிப்பிட்டிருக்கிறார் பண்டிதமணி.

தொடர்ந்து பல இலக்கிய, இலக்கண நூல்களைக் கற்றுத்தேர்ந்து சிறந்த புலவரானார் பண்டிதமணியார். சண்முகனாரின் மூலம் அக்காலத்தில் முதுபெரும் தமிழறிஞர்களாகப் போற்றப்பட்ட மு. ரா. கந்தசாமிக் கவிராயர், மறைமலையடிகள், ஞானியாரடிகள், வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், உ.வே.சாமிநாதையர் போன்ற அறிஞர்களின் நட்புக் கிடைத்தது. அறிஞர்களது தொடர்பால் பண்டிதமணியின் இலக்கிய ஆர்வம் மேலும் அதிகரித்தது. சைவ சமய சாத்திரங்களைப் பயில வேண்டும் என்ற பெரு விருப்பமும் அவருக்கு உண்டானது. அவற்றை தாமே பயில்வதை விட, சமயத்துறையில் வல்ல பெரியார் ஒருவர் மூலம் பயிலுதல் சிறப்புத் தரும் என்று கருதினார். அப்போது காரைக்குடியில் வாழ்ந்த சிறந்த சிவபக்தரும், சைவ அறிஞருமான சொக்கலிங்கையா என்பவரை நாடி, அவரிடம் இரண்டு ஆண்டுகள் சைவ சாத்திரங்களைப் பயின்றார்.

இதே சமயத்தில் பண்டிதமணிக்கு வடமொழியும், வடநூல் சாத்திரங்களும் பயிலும் எண்ணம் தோன்றியது. ஆகவே அக்காலத்தில் சிறந்த வடமொழி வல்லுநராக விளங்கிய தருவை நாராயண சாஸ்திரியாரை அணுகித் தமது விருப்பத்தைத் தெரிவித்தார். சுமார் ஐந்து ஆண்டுகள் அர்த்தசாஸ்திரம், விதுர நீதி, சுக்ரநீதி போன்ற சாத்திர நூல்களையும், பாணினி போன்ற இலக்கணங்களையும், சாகுந்தலம், மேகதூதம் போன்ற காவியங்களையும் கற்றுத் தேர்ந்தார்.

பண்டிதமணியின் அறிவும் திறனும் கண்டு தமிழறிஞர்கள் பலரும் அவரிடம் நட்பு கொண்டனர். மகாவித்வான் ரா. ராகவையங்கார் அவரை நான்காம் தமிழ்ச்சங்கம் உருவாக்கி நடத்திவந்த வள்ளல் பாண்டித்துரைத் தேவரிடம் அறிமுகப்படுத்தினார். தேவர், மதுரை தமிழ்ச் சங்கத்தை நடத்தும் புலவர்களுள் ஒருவராகப் பண்டிதமணியையும் ஏற்றுக் கொண்டார். பண்டிதமணியும் தம் உடல்நிலைமையையும் பொருட்படுத்தாது அச்சங்கக் கூட்டங்களில் கலந்து கொண்டார். நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்தார். அதேசமயம் அறிவார்ந்த சான்றோர்கள் நிரம்பிய தமது செட்டிநாட்டுப் பகுதியிலும் இதே போன்றதொரு சங்கம் இருந்தால், அது மேலும் அறிவைப் பெருக்கவும், தமிழையும், சமயத்தையும் வளர்க்கவும் உதவுமே என்று நினைத்தார்.

ஊருக்குச் செல்லும் போதெல்லாம் மேலைச்சிவபுரி வள்ளல் வ. பழ.சா. பழநியப்பச் செட்டியாரைக் கண்டு இலக்கியம், சமயம், சாத்திரம் பற்றிப்

பேசிக் கொண்டிருப்பது பண்டிதமணியின் வழக்கம். அவ்வாறு பேசும்போதெல்லாம் நம் பகுதியிலும் ஒரு சங்கம் அமைக்க வேண்டும், அதன் மூலம் தமிழையும், சைவத்தையும் வளர்க்க வேண்டும் என்று கூறுவார். இருவரது முயற்சியால் 1909ம் ஆண்டு மே மாதம் 13ம் நாள் மேலைச்சிவபுரியில் 'சன்மார்க்க சபை நிறுவப்பட்டது. நிகழ்ச்சிக்கு அரசன் சண்முகனார் தலைமை தாங்கினார். மு. ரா. கந்தசாமிக் கவிராயர், சொ. வேற்சாமிக் கவிராயர் உட்படப் பல பெரும்புலவர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர். சபையின் கிளை நிலையமாக 'கணேசர் செந்தமிழ்க் கலாசாலை' நிறுவப்பட்டது.

"ஒழுக்கம் கல்வி முதலிய பல விஷயங்கள் குறித்து உபந்நியாசங்கள் புரிவித்தலும், தக்க பண்டிதர் ஒருவரைச் சபையில் உபாத்தியாயராக நியமனஞ்செய்து அங்கு சேரும் சிறுவர்களுக்குக் கல்வி பயிற்றுவித்தலும், சபையில் வந்து படிப்பார் பலருக்கும் உபயோகமாகும்படி தமிழ் ஸ்ம்ஸ்க்ருத மொழிகளிலுள்ள எல்லாப் புத்தகங்களையும் தொகுத்து வைத்தலும், கல்வி ஒழுக்கம் முதலிய துண்டுப் பத்திரங்கள் அச்சிட்டு எல்லாருக்கும் இனாமாகக் கொடுத்தலும், லௌகீக இலக்கண, இலக்கிய சாஸ்திர சம்பந்தமான பத்திரிக்கைகளைத் தருவித்தலும் பிறவுமாம்" - என்பது மேலைச்சிவபுரி. சன்மார்க்க சபையின் நோக்கமாக வரையறை செய்யப்பட்டது. திங்கள் தோறும் சொற்பொழிவுகளும் ஆண்டுதோறும் விழாக்களும் நடைபெற்றன. கணேசர் செந்தமிழ்க் கலாசாலையே பிற்காலத்தில் கணேசர் செந்தமிழ்க் கல்லூரி என்று பெயர் பெற்றதுடன், தமிழகத்தின் தென்பகுதியில், வித்வான் வகுப்பு நடத்துவதற்கென ஏற்பட்ட முதல் கல்லூரி என்ற சிறப்பையும் பெற்றது.

இல்லப் பொறுப்புகள் அனைத்தையும் சரிவர நிறைவேற்றிய பண்டிதமணியார், தமது முப்பத்தியிரண்டாம் அகவையில் தனது அத்தை மகள் மீனாட்சியை மணந்து கொண்டார். இவர்களுக்கு நான்கு மகன்களும், மூன்று பெண்களும் பிறந்தனர். குடும்பப் பொறுப்புகள் நாளுக்கு நாள் அதிகரித்த போதும், தமது இலக்கிய ஆர்வத்திற்குத் தடையேற்படுத்தா வண்ணம் தமது வாழ்க்கை முறையை வகுத்துக் கொண்டார்.

சொற்பொழிவு, நூல் பதிப்பித்தல், புதுநூல் உருவாக்கம், மொழிபெயர்ப்பு எனத் தமிழ் இலக்கியத்தின் பல்துறைகளிலும் ஆர்வம் காட்டினார். வடமொழியிலிருந்து சிறந்த நூல்களை தமிழுக்கு மொழியாக்கம் செய்த முன்னோடி பண்டிதமணியார் என்பது குறிப்பிடத்தக்கது. மிருச்சகடிகத்தை மண்ணியல் சிறுதேராகவும், கௌடிலீயம் என்னும் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தை பொருணூலாகவும், சுக்கிர நீதி, சுலோசனை, உதயண சரிதம், மாலதி மாதவம், பிரதாப ருத்ரீயம்

போன்ற நூல்களையும் இவர் மொழிபெயர்த்திருக்கிறார். தவிர இலக்கியக் கட்டுரைகள், சமயக்கட்டுரைகள், திருவாசக உரைக் கட்டுரையான கதிர்மணி விளக்கம் போன்ற உரைநடைக் கோவை நூல்களைப் படைத்திருப்பதுடன், தன் பொறுப்பில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம், அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழிசைப் பாடல் வரிசை போன்ற நூல்களையும் பதிப்பித்திருக்கிறார்.

இவரது பெருமையையும் அறிவுத்திறனையும் கண்ட செட்டிநாட்டு அரசர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார், தனது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இவரைத் தமிழ்ப் பேராசிரியர் பொறுப்பேற்குமாறு வேண்டினார். முதலில் மறுத்தாலும் பின்னர் அப்பொறுப்பை ஏற்றுக் கொண்ட பண்டிதமணியார் சுமார் 12 ஆண்டுகாலம் அக்கல்லூரியில் பேராசிரியராகவும், தமிழ் மற்றும் ஆராய்ச்சித் துறைத் தலைவராகவும் பணியாற்றினா "ஏழு மாதங்கூடப் பள்ளிக்கூடத்தில் கல்வி பயிலாமல், பன்னிரண்டு ஆண்டுகள் பல்கலைக்கழகத்தில் பேராசிரியாக இருந்து, தமிழ்ப்பணி ஆற்றிய தனிச்சிறப்பு இவர்க்கு உரியது. முயற்சியும் உறுதியும் இருக்குமானால் உடல் ஊனமுற்றவர்களும் உயர்நிலையை அடைய இயலும் என்பதற்குக் கதிரேசனாரின் வாழ்க்கை எடுத்துக்காட்டாகும்" என்கிறார் தமிழறிஞர் சோமலெ தனது பண்டிதமணி என்னும் நூலில்,

அ. சிதம்பரநாதன் செட்டியார், டாக்டர் வ.சுப. மாணிக்கம் போன்ற பல தமிழறிஞர்கள் பண்டிதமணியாரின் மாணவர்கள் என்பது நினைவுகூரத் தக்கது. **"இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை வளர்ச்சியில் *பண்டிதமணிக்கு சிறப்பான ஓர் இடம் உண்டு" என்கிறார் டாக்டர் வ.சுப. மாணிக்கம்.***

சைவ சமயத்தின் மீது அளவிலாப் பற்றுக் கொண்ட கதிரேசன் செட்டியார் பலவான்குடியில் மணிவாசகக் சங்கத்தையும், சிதம்பரத்தில் தில்லை தமிழ்ச் சங்கத்தையும் உருவாக்கினார். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, திரு.வி. கலியான சுந்தர முதலியார், சொ. முருகப்பச் செட்டியார் போன்ற தமிழறிஞர்கள் பண்டிதமணியின் மீது பெருமதிப்புக் கொண்டிருந்ததுடன் அவரது சங்கப் பணிகளிலும் ஆர்வம் காட்டினர். 'மகாமகோபாத்தியாயர் பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் என்றால் தமிழ்நாட்டில் அழுதபிள்ளை வாய் மூடாது. அது பாட்டுக்கு அழுது கொண்டிருக்கும். ஆனால் தமிழ்ப் புலவர்கள் கூட்டங்களில் இப்பெயரைச் சொன்ன மாத்திரத்தில் மரியாதைக்கு அறிகுறியாக அமைதி நிலவும்" என்று நகைச்சுவையாகக் குறிப்பிடுகிறார் கல்கி. பண்டிதமணியின் தமிழ்ச்சேவையையும், சமயப் பணியையும் பாராட்டி ஆங்கிலேயே அரசு அவருக்கு மகாமகோபாத்தியாய என்ற பட்டத்தை

வழங்கியது. இது தவிர சைவ சித்தாந்த வித்தகர், முதுபெரும் புலவர், தமிழ் ஞாயிறு என பல்வேறு பட்டங்கள் பெற்று தமிழுக்காகவும், தமிழ்ச் சமய வளர்ச்சிக்காகவும் அயராது உழைத்த பண்டிதமணியார் அக்டோபர் 24, 1953 அன்று 73ம் வயதில் காலமானார்.

கடந்த ஆண்டு அவர் தோற்றுவித்த சன்மார்க்க சபையின் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டதுடன், பண்டிதமணியின் எழுத்துக்களையும் நாட்டுடைமையாக்கி தமிழக அரசு அவருக்கு கௌரவம் சேர்த்தது. தமிழ், வடமொழி, சமயம், இலக்கியம் என அனைத்துத் துறைகளிலும் ஆர்வம் கொண்டு, அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார், தமிழ் இலக்கியத்தின் குறிப்பிடத்தகுந்த முன்னோடிகளுள் ஒருவர் என்பதில் ஐயமில்லை.

(நன்றி. இந்திய இலக்கியச் சிற்பிகள் - பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், சாகித்ய அகாதமி நிறுவன வெளியீடு)

01] பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார்

https://www.youtube.com/watch?v=KqlxCLQs4FQ

02] பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் | இலக்கிய உரையாசிரியர்கள்

https://www.youtube.com/watch?v=0N8vZQUTVgM

03] PANDITHAMANI M.KATHIRESAN CHETTIAR || Biography in Tamil

https://www.youtube.com/watch?v=cJnU20RNSwY

உரைநடைக் கோவை

https://pandithamani.com/2025/12/03/%e0%ae%89%e0%ae%b0%e0%af%88%e0%ae%a8%e0%ae%9f%e0%af%88%e0%ae%95%e0%af%8d/

உரைநடைக் கோவை

(இலக்கியக் கட்டுரைகள்)

ஆசிரியர்

மகாமகோபாத்தியாய முதுபெரும்புலவர்

பண்டிதமணி

மு. கதிரேசச் செட்டியார்

பொருளடக்கம்

விருதுகள்

- மண்ணியல் சிறுதேர் வெளிவந்த காலத்தில் விபுலானந்தர் பண்டிதமணியை 'கவிமணி' எனப் பாராட்டினார்.
- 1925-ல் 'பண்டிதமணி' என்ற பட்டத்தை மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையின் 16-ம் ஆண்டு விழாவில் உ.வே.சா. தலைமையில் ரா. ராகவையங்கார் வழங்கினார்.
- 1942-ல் மகோபாத்யாயா பட்டத்தை பிரிட்டிஷ் மன்னரின் பிறந்த நாளில், மாநில ஆளுநர், சென்னை அரசு சார்பாக வழ்ங்கினார். இச்சிறப்பு விருதுக்கு அரசு, ஆண்டுதோறும் 100 ரூபாய் வழங்கியது. இந்திய விடுதலைக்குப் பின் இது நிறுத்தப்பட்டது.
- 1951-ல் குன்றக்குடி அடிகளார் இவருக்குச் 'சைவ சித்தாந்த வித்தகர்' என்ற பட்டத்தைக் கொடுத்தார்.
- தமிழ்ப் புலவர் மாநாட்டில் அண்ணாமலை செட்டியார் 'முது பெரும் புலவர்' என்ற பட்டத்தை அளித்தார்.
- பாண்டித்துரைத் தேவர் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கி வைத்த புலவர்களின் பட்டியலில் பண்டிதமணியையும் சேர்த்தார்.



நூல்கள்

மொழிபெயர்ப்பு

- பிராதபருத்தரீயம்
- மாலதி மாதவம்
- சுக்கிர நீதி
- உதயணன் சரிதை
- சுலோசனை
- மண்ணியல் சிறுதேர் (மிருச்சகடிகம்)
- கௌடலீயம் பொருணூல் (கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்)
- மிருச்சகடிகம்
- இரசங்காதாரம்

சைவ சமயம்

- உரை நடைக் கோவை (முதற்பகுதி) சமயக் கட்டுரைகள்
- உரை நடைக் கோவை (இரண்டாம் பகுது) இலக்கியக் கட்டுரைகள்
- திருவாசகம் விளக்கம்
- திருச்சதகம் விளக்கம்
- நீத்தல் விண்ணப்பம்
- திருவெம்பாவை விளக்கம்
- பதிற்றுப்பத்தந்தாதி

சொற்பொழிவு

- பரிமேலழகரின் உரைநயம்
- குறுந்தொகை கடவுள் வாழ்த்து

பிற

- நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு
- பண்டிதமணி பாடல்கள்
- பண்டிதமணி கடிதங்கள்
- கதிர்மணி விளக்கம் (திருவாசக விளக்கம்)

இலக்கியவாழ்க்கை

பண்டிதமணி தமிழ் ஆய்வாளர், சொற்பொழிவாளர், கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர் என பல தளங்களில் தமிழ்ப்பணி ஆற்றியவர் பண்டிதமணி. வகுப்புகள் எடுப்பதிலும், சொற்பொழிவாற்றுவதில் ஈடுபாடு கொண்டவர். இவருடைய சொற்பொழிவுகள் நூல்களாக பதிப்பிக்கப்பட்டுள்ளன. இவரது கவிதைகள் சிலவும் கடிதங்களும், 'மாலதி மாதவம்' என்ற மொழிபெயர்ப்பும் கையெழுத்துப் பிரதிகளாக உள்ளன.

மொழியாக்கம்


பண்டிதமணியின் முக்கியப் பங்களிப்பாகச் சமஸ்கிருதத்திலிருந்து தமிழிற்கு அவர் மொழிபெயர்த்த நூல்களைச் சொல்லலாம். அவரின் மொழிபெயர்ப்பு நூல்கள் மண்ணியல் சிறுதேர், சுக்கிர நீதி, 'அர்த்த சாஸ்திரம்', 'சுலோசனை', 'உதயண சரிதம்', 'மாலதி மாதவம்', 'பிரதாப சரித்திரம்' ஆகியன.

கவி பாசன் எழுதிய 'சாருதத்தம்' என்ற நாடகத்தை, சூத்திரகர் 'மிருச்சகடிகம்' என்ற பெயரில் நாடகமாக்கினார். இதையே பண்டிதமணி 'மண்ணியல் சிறுதேர்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்தார். இந்நாடகம் எழுபதுகளில் தமிழகப் பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டத்தில் இடம்பெற்றிருந்தது. இந்நூலின் மூல உரையாடல் பகுதிகளை உரைநடை வடிவிலும், மூலப்பாடல்களைச் செய்யுள் வடிவிலும்

மொழிபெயர்த்துள்ளார். 'சுக்கிர நீதி' நூலைப் பண்டிதமணி மொழிபெயர்த்தபோது, உ.வே.சா. வின் வலியுறுத்தலின் பேரில், மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையினர், அண்ணாமலைச் செட்டியாரின் உதவியுடன் 1926-ல் இந்நூலை வெளியிட்டனர்.



அர்த்த சாஸ்திரம்



பண்டிதமணி கையெழுத்து

1942-ல் சாணக்கியரின் அர்த்தசாஸ்திரத்தை அண்ணாமலைப் பல்கலைகழகத் தமிழ்த்துறை தமிழில் மொழிபெயர்க்கும் பொறுப்பைப் பண்டிதமணியிடம் ஒப்படைத்தது. பண்டிதமணிக்கு உதவியாக ஆசிரியர் பி.எஸ். இராமானுஜாச்சாரி நியமிக்கப்பட்டார். முதல் மூன்று அதிகாரங்களை மொழிபெயர்த்த நிலையில் பண்டிதமணியின் உடல்நலம் குன்றியதால் பி.எஸ். இராமானுஜாச்சாரி நான்கு முதல் 12 அதிகாரங்களை மொழிபெயர்த்தார். 'அர்த்த சாஸ்திரம்' 1955-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக வந்தது. இந்த நூலில் திருக்குறளின் பாடல்களை மேற்கோளாகச் சேர்த்து செப்பம் செய்தவர் வெள்ளைவாரணர்.

சொற்பொழிவாளர்

பண்டிதமணி தமிழ் மாநாடுகளிலும், சிறப்புக் கூட்டங்களிலும் சொற்பொழிவாற்றினார். தஞ்சை, திருச்சி மாவட்டம் புலவர் மாநாடு, பூவாளூர் சைவ சித்தாந்த மாநாடு, தூத்துக்குடி சைவசித்தாந்தச் சபை பொன்விழா போன்ற பெரிய மாநாடுகளில் தலைமை தாங்கிப் பேசினார். சமஸ்கிருத நூல்களிலிருந்து சூத்திரங்களையும் பாடல்களையும் மேற்கோள் காட்டிப் பேசுவது, பாடல்களை அப்படியே ஒப்புவிக்காமல் விளக்கங்கள் தருவது ஆகியவை இவர் பேச்சின் சிறப்பம்சங்கள். இவரது பேச்சுகள் சிறுபிரசுரங்களாகவும், கட்டுரையாகவும் தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளன. .

1925-ல் சென்னையில் உ.வே.சா. தலைமையில் 'பரிமேலழகரின் உரைநயம்' என்னும் இவரது உரை சிறுபிரசுரமாக வந்திருக்கிறது. 1940-ல் சைவ சித்தாந்த நூல் பதிப்புக் கழகம் நடத்திய குறுந்தொகை மாநாட்டிற்குப் பண்டிதமணி தலைமை தாங்கினார். அப்போது குறுந்தொகை கடவுள் வாழ்த்துக்கு மட்டும் இவர் கொடுத்த விளக்கம் அச்சில் வந்துள்ளது.

கரந்தைத் தமிழ்ச் சங்கக் கூட்டத்தில் மறைமலையடிகள் சங்கப் பாடல்களிலும் தேவார திருவாசகப் பாடல்களிலும் வடமொழிக் கலப்பு இல்லை என்று பேசியதற்கு பண்டிதமணி கலித்தொகைப் பாடல் வரியையும், தேவாரத்தில் வரும் வரியையும் எடுத்துக்காட்டி மறுப்புரைத்தார். தூத்துக்குடியில் நடந்த சைவ சித்தாந்த ஆண்டுவிழாவில் பண்டிதமணி கம்பராமாயணத்தைக் குறித்து உரையாற்றினார். 1944-ல் சென்னை, கோகலே மண்டபத்தில் நடந்த கம்பன் விழாவில் பண்டிதமணி இராவணனைப் பற்றி உரையாற்றினார்.

ஆய்வுகள்

பண்டிதமணி 1933-ல் இலங்கையில் பொன். ராமநாதனின் வேண்டுகோளின்படி யாழ்ப்பாணத்திற்குச் சென்றார். யாழ் நகரிலிருந்து வெளியான ஞாயிறு, ஈழகேசரி போன்ற இதழ்களில் கட்டுரைகள் எழுதினார்.

பண்டிதமணி சமயம் பற்றியும், இலக்கியங்கள் பற்றியும் பேசிய பேச்சுகளும் திருச்சி வானொலி நிலையத்தில் பேசிய பேச்சும் நூல்களாக வந்துள்ளன. இவற்றில் 17 கட்டுரைகள் உள்ளன. 1941-ல் சமயம் பற்றிப் பேசிய சொற்பொழிவுகள் 'உரைநடைக் கோவை' என்ற தலைப்பில் முதல் பகுதியாக வந்தது. 1943-ல் இலக்கியம் குறித்த உரைகள் 'உரைநடைக்கோவை இரண்டாம் பகுதி' யாக வந்தது. எஞ்சிய கட்டுரைகள் 'இலக்கிய நயம்' என்னும் தலைப்பில் வந்தன. திருவாசகத்தில் திருச்சதகம், நீத்தார்
விண்ணப்பம், திருவெம்பாவை ஆகியவற்றிற்குப் பண்டிதமணி எழுதிய விளக்கவுரை 'கதிர்மணி விளக்கம். ஒவ்வொரு பாடலுக்கும் கருத்துரை, பதவுரை, விளக்கவுரை மேற்கோள் பாடல், இலக்கண அமைதி ஆகியவற்றைக் கொண்டது. 1951-ல் இந்த உரை தமிழக அரசின் பரிசைப் பெற்றது.

1.4 உரை தோன்றுவதற்குரிய சூழல்கள்

https://www.tamilvu.org/courses/degree/d061/d0613/html/d0613114.htm

தமிழில் உரைகள் தோன்றியதற்குரிய அடிப்படைச் சூழல்கள்:
(1) சங்க கால வீழ்ச்சிக்குப் பிறகு வந்த வேற்றரசர்களின் ஆட்சிக் காலங்களில், மீண்டும் **சங்க இலக்கியங்களையும் தொல்காப்பிய**த்தையும் படிக்கவும், அவை பற்றிச் சிந்திக்கவும் கூடிய ஆர்வநிலை ஏற்பட்டது; அதேபோது, மொழிநடை, பண்பாட்டு மாற்றங்கள், செய்திகளின் அருமைகள் முதலியவை தலைமுறைகளின் இடைவெளி காரணமாகச் சிறிய சிறிய தடைகளை ஏற்படுத்தின. எனவே **உரை** கூறுவது அவசியமாயிற்று.

(2) சங்க இலக்கியப் பாடல்கள் தனித்தனியாக எழுதப்பட்டவை ; பாடப்பட்டவை ; இவை, கி.பி.6ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு-தொகுக்கப்பட்டன. தொகைகளாக வரும்போது, மொத்தமாகப் படிப்பதற்கும் **உரை** கூறுவதற்கும் வாய்ப்புகள் ஏற்பட்டன.

(3) சமணத் துறவிகளின் செயல்பாடுகளினால் பல சமணப் பள்ளிகள், சங்கங்கள் ஏற்பட்டன ; அப்போது இலக்கண இலக்கிய நூல்களும் தத்துவங்களும் பகிர்ந்து கொள்ளப்பட்டன; விவாதிக்கப்பட்டன. இந்தச் சூழ்நிலைகள் தமிழில் **உரைகள**் தோன்ற நல்ல தளம் அமைத்தன.

1.4.1 உரைகள் வரலாறு

தமிழில் இன்று கிடைப்பவற்றுள், முதல் உரையாகக் கருதப்படுவது **இறையனார் களவியலுரை** ஆகும். இந்த உரை, நக்கீரர் பெயரால் வழங்குகிறது. கி.பி. 8 அல்லது 9ஆம் நூற்றாண்டில் எழுதப் பெற்றது. இதன் நடை, உரைநடைவளர்ச்சிக்கு மிக முக்கியமான அடித்தளமாகும். இதனைத் தொடர்ந்து, **தொல்காப்பியம்** பலருடைய கவனத்தைக் கவர்ந்தது. இளம்பூரணர் என்பார் முதன்முதலாகத் **தொல்காப்பியம்** முழுமைக்கும் உரை எழுதினார். அதன் பின்னர், சேனாவரையர் பேராசிரியர், முதலிய பலர் உரை எழுதினார்கள். **தொல்காப்பிய உரை**களுள், பொருளதிகாரத்துக்குப் பேராசிரியர் எழுதிய உரை, தமிழில் இலக்கியக் கொள்கை பற்றி எழுத மிகவும் துணை நிற்பது. கி.பி.11-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் உரைகள் அதிகம் தோன்றின. தொடர்ந்து உரைகள் காலம்தோறும் எழுதப்பட்டு வருகின்றன.

20-ஆம் நூற்றாண்டிலும் உரைகள் பல தோன்றியுள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கது. பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் எழுதிய **திருவாசக** உரையாகும் **கதிர்மணி விளக்கம்** என்பது இதன்பெயர். மறைமலையடிகள் எழுதிய **முல்லைப்பாட்டு - ஆராய்ச்சி உரை** மற்றும் **பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை** என்ற இரண்டும் உரைகளாக மட்டுமல்லாமல், இக் காலத்துத் தமிழ்த் திறனாய்வின் தொடக்க கால முயற்சிகளாகவும் கருதப்படுகின்றன. உரை என்பதற்கும் திறனாய்வு என்பதற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் குறைவே என்பதனை மறைமலையடிகளின் இந்த இரு உரைகளும் நமக்குக் காட்டுகின்றன.

தமிழில் வழங்கும் இன்றைய திறனாய்வின் வரலாறு எழுதுகிறவர்கள், இதனைக் குறிப்பிடாமல் போவதில்லை. அடுத்து, ந.மு.வேங்கடசாமி நாட்டார் எழுதிய **சிலப்பதிகார** உரையும், பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார் எழுதிய **சங்க இலக்கிய உரை**களும் குறிப்பிடத் தக்கவை. வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார், **கம்பராமாயண**த்துக்கு விரிவான உரை எழுதியுள்ளார். இதிலுள்ள விளக்கங்களும் ஒப்பீட்டுக் குறிப்புகளும் எடுத்துக்காட்டுப் புராணக் கதைகளும்

குறிப்பிடத்தக்கவை. சேக்கிழாரின் **பெரியபுராண**த்துக்கு சி.கே.சுப்பிரமணிய முதலியார் விளக்கமான உரையை எழுதியுள்ளார்.

1.4.2 உரைகளின் வகைகள்

எவ்வகையான நூல்கள் மீது உரைகள் அமைகின்றன என்பதன் அடிப்படையில் உரைகளை முக்கியமாக இரண்டாகக் கொள்ளலாம். ஒன்று **இலக்கண உரைகள்.** எழுத்து, சொல், பொருள் ஆகியவற்றுக்கு உரை எழுதுவது பழைமையானது; அதே சமயத்தில் தொடர்ந்து வழங்கி வருவதும் ஆகும். இரண்டு - இலக்கிய உரைகள். முக்கியமாகப் பழைய இலக்கியங்களுக்கான உரைகள் பலரால் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இலக்கணம், இலக்கியம் ஆகிய இரண்டிற்கும் உரையெழுதியவர்கள் மிகவும் குறைவு. நச்சினார்க்கினியர் **தொல்காப்பிய**த்துக்கும் உரையெழுதியுள்ளார் ; அதே சமயத்தில் **பத்துப்பாட்டு** எனும் சங்க இலக்கியத்தொகை நூலுக்கும், **சீவக சிந்தாமணி** எனும் காப்பிய நூலுக்கும் உரை கண்டுள்ளார். இலக்கியமும் இலக்கணமும் அல்லாமல், சமய தத்துவ நூல்களுக்கும் உரை எழுதுதல், ஒரு தேவையாகவும் முறையாகவும் உள்ளது. மெய்கண்டாரின் **சிவஞானபோத**த்திற்கு, **சிவஞான மாபாடியம்** எனும் உரையை சிவஞான முனிவர் எழுதியுள்ளதை எடுத்துக்காட்டாகக் கூறலாம். தமிழில் தத்துவ நூல்களுக்கு எழுந்த உரைகள் மிகவும் குறைவேயாகும். இலக்கியத்திற்கு அமைந்த உரைகளே அதிகம்.

1.4.3 உரைகளின் முக்கியத்துவம்

மூலப் பனுவல்களே, முதன்மையும் முக்கியத்துவமும் உடையவை என்றாலும், பெரும்பாலான உரைகள் மூலப் பனுவல்களின் அளவுக்கு - ஆனால், 'உரைகள்' என்ற எல்லைக்குள் - முக்கியத்துவம் உடையனவாக உள்ளன. அடியார்க்கு நல்லார் உரை, தமிழின் நாடகம் பற்றியும் இசை பற்றியும் அறிவதற்கு இன்றியமையாத மூலமாக உள்ளது. சைவ சித்தாந்த வரலாற்றில் மெய்கண்ட தேவர் எழுதிய **சிவஞானபோதம்** எவ்வளவு முக்கியமானதோ, அந்த அளவிற்கு, சிவஞானமுனிவரால் எழுதப்பட்ட **சிவஞான மாபாடியம்** எனும் உரையும் முக்கியமானதாக விளங்குகிறது. சில உரைகள், மூல நூல்களைவிட முக்கியத்துவமும் பெருமையும் பெற்றுவிடுகின்றன. காட்டாக, **இறையனார் களவியல் உரை** மற்றும் **யாப்பருங்கல விருத்தியுரை** ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

தமிழின் மொழி வரலாறு, பண்பாடு மற்றும் சமூக வரலாறு முதலியவற்றை எழுத இலக்கண இலக்கிய நூல்கள் உதவுகின்றன. அதுபோலவே உரைகளும் உதவுகின்றன. காட்டாக, **தொல்காப்பியம்**

- **சொல்லதிகாரத்துக்குச்** சேனாவரையர் ழுதிய உரை, தமிழ்மொழியில் சொற்பாகுபாடுகள், சொல்லமைப்புகள் முதலியவற்றை அறியப் பெரிதும் உதவுகின்றது. அதுபோல் தமிழின் கவிதையியலை (poetics) அறிவதற்கு **யாப்பருங்கல**த்துக்கு அமைந்த விருத்தியுரை, கவனத்திற்குரிய பல செய்திகளையும் பண்புகளையும் தருகிறது.

உரைகள் யாப்பு வடிவில் அமைந்தவை அல்ல. அவை உரைநடையிலேயே அமைந்துள்ளன. தமிழின் உரைநடை (prose) வளர்ச்சியில் இந்த உரைகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. தொடரமைப்பு, சொல் தேர்வு, விளக்கமுறைக்கான பிரத்தியேகமான நடை, வினா-விடை பாணியிலான நடை, தெளிவு, ஆற்றொழுக்கான போக்கு முதலியவற்றைக் கொண்டுள்ள இந்த உரைகள், தமிழ் உரைநடையின் சிறந்த பண்புகளாக உள்ளன. உரையாசிரியர்களே அன்று சிறந்த உரைநடையாசிரியர்களாக இருந்திருக்கிறார்கள்..

தமிழறிஞர் வரிசை

பண்டிதமணி

மு. கதிரேசன் செட்டியார்

https://siliconshelf.wordpress.com/2016/03/08/%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%9E%E0%AE%B0%E0%AF%8D-%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%9A%E0%AF%88-12-%E0%AE%AA%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%A4%E0%AE%AE/

பண்டிதமணி சிறந்த தமிழறிஞர். சைவப் பாரம்பரியத்தில் வந்தவர். தூய தமிழில் பேசி எழுத வேண்டும் என்று விடாமல் முயன்றவர். ஆனால் சமஸ்கிருதத்திலும் தேர்ச்சி பெற்றவர். மிருச்சகடிகம், சுக்ரநீதி போன்ற நூல்களை தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். மஹோமஹோபாத்யாயர் என்று உ.வே.சா.வைத்தான் பொதுவாகக் குறிப்பிடுவார்கள். இவருக்கும் அரசு அந்தப் பட்டத்தை அளித்திருந்தது. அபிராமணர்கள் சமஸ்கிருதத்தில்

தேர்ச்சி பெறுவது அபூர்வம். அதிலும் தூய தமிழுக்காக முயலும் பலரிடம் அது பிற மொழி வெறுப்பாகவே மாறிவிடுவதைப் பார்க்கிறோம். இவர் இப்படித் தேர்ச்சி பெற்றதற்கும், பிராமணர்களுக்கே அனேகமாக வழங்கப்பட்ட மஹோமஹோபாத்யாயர் பட்டத்தைப் பெற்றதற்கும் ஒரு ஜே!

பண்டிதமணி பற்றி **சோமலே** எழுதிய ஒரு புத்தகமும் கிடைத்தது. இவர் போன்றவர்களின் தாக்கத்தை இன்று உணர்வது கொஞ்சம் கஷ்டம், ஆனாலும் இந்தப் புத்தகம் கொஞ்சம் உதவுகிறது.

ஓப்பன் ரீடிங் ரூம் **ரமேஷ் சக்ரபாணி** மூலம் கிடைத்த சிறு அறிமுகம் – அஜயன் பாலா எழுதியது.



பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார்:
பிறப்பு 16-10-1881, இறப்பு 24-10-1953

ஏழு மாத கல்வி கூட பள்ளியில் பயிலாமல் பன்னிரண்டு வருடங்கள் பல்கலைகழகத்தில் பேராசிரியராக இருந்தவர். மேலைசிவபுரி சன்மார்க்க சபையின் தோற்றுவாய். எண்ணற்ற மாணவர்களை தமிழ் கடலுக்குள் தள்ளி அவர்கள் முத்தெடுக்க காரணமாக இருந்தவர். அன்னைத் தமிழின் திருப்பாதங்களுக்கு எண்ணற்ற நூல்களை எழுதி காணிக்கையாக்கியவர். எத்தகைய சூழலிலும் மனம் தளராமல் எதிர்ப்புகளை துடுப்புகளாக்கி தமிழுக்காக வாழ்ந்த மாணிக்கக் குன்று. பண்டிதமணி என அனைவராலும் போற்றபட்டவர். முத்துகருப்ப கதிரேசன் செட்டியார்.

பூங்குன்றம் சங்க இல்க்கியத்தில் புகழ்பெற்ற நானிலம். யாவரும் கேளீர் என உலகையே தன்னுணர்வில் கரைத்த கணியன் பூங்குன்றனார் அவதரித்த திருத்தலம். இப்போது மகிபாலன்பட்டி என அழைக்கப்படும் செட்டிநாடுக்குட்பட்ட பகுதி. இந்த மகிபாலன் பட்டி எனும் பண்டைய பூங்குன்றம் எனும் ஊரில் பிறந்த பெருமைக்குரியவர் கதிரேசனார். தந்தை முத்துகருப்பன். தாயார் சிகப்பி. தன் மூன்றாம் வயதில் இளம்பிள்ளை வாதத்தால் தாக்கப் பெற்ற காரணத்தால் பண்டிதமணி இளம் வயதில் பெரும் அவதியுற்றார். பள்ளிக் கல்வியில் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் ஆகியவை கற்றுத் தேர்ந்தாலும் நெடுநாள் நீடிக்கவில்லை. குடும்பச் சூழல் காரணமாக கல்வி கைதவறிப் போனது. பதினோரு வயதில் இலங்கை சென்றார். வாழ்க்கை அங்கும் வீதி நாயாக விரட்டியது. தந்தை இறந்ததும் மீண்டும் மகிபாலன்பட்டி திரும்பினார். தமிழ் ஆர்வம் துளிர்தத்து. சோழவந்தான் அரசஞ்சண்முகனாரிடம் தமிழை முறையாகப் படித்தார். உடலுக்குள் தமிழுணர்வு ஆறாக பெருக்கெடுத்தது. பதினான்கு வயதில் பண்டிதமணியின் தந்தை காலமானார். அதே ஆண்டில் அவரது இடது காலும், இடது கையும் வலுக்குறைந்தன. உடல் நலம் குறையக் குறைய அதற்கு மாற்றாக அறிவு பலத்தை பெருக்கும் ஆவல் அவரை உந்தி தள்ளியது. தருவை நாராயண சாஸ்திரியிடம் வடமொழி கற்றார்.

தொடர்ந்து அதன் மூலம் பெற்ற அறிவை தமிழ் கூறும் நல்லுலகம் பயனுறச் செய்வதில் முனைப்பு காட்டினார். இதனால் **மிருச்சகடிகம் (மண்ணியல் சிறுதேர்), உதயண சரிதம், சுக்ரநீதி, சுலோசனை** போன்ற நூல்களை எழுதியும் மொழிபெயர்த்தும் தமிழுக்குத் தொண்டு செய்தார்.

இது மட்டுமல்லாமல் தமிழில் **உரைநடைக்கோவை** எனும் தலைப்பில் பல கட்டுரைகள் அடங்கிய இரு தொகுதிகளையும், **நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, கதிர்மணி விளக்கம், பண்டிதமணி பாடல்கள், பண்டிதமணி கடிதங்கள்** போன்ற நயமிக்க நேரடி தமிழ் நூல்களையும், மற்றும் திருவாசகம், திருவெம்பாவை போன்றவற்றிற்கு விளக்க உரைகளையும் எழுதியுள்ளார்.

தனக்கு இன்பமளித்த தமிழை பலருக்கும் உண்டாக்கும் வகையில் மதுரையின் நான்காம் தமிழ்சங்கம் போல மேலைச்சிவபுரியில் சன்மார்க்க சபை எனும் ஒன்றை உருவாக்கினார். தமிழ் பிரவேச, பண்டித, பாலபண்டித வகுப்புகளை உருவாக்கி எண்ணற்ற மாணவர்களுக்கு தமிழ் எனும் இன்ப அருவியை அறிமுகப்படுத்தினார்.

பண்டிதமணியாரின் தமிழ் அறிவை கேள்வியுற்ற அண்ணாமலை அரசர் முறையாக துவக்கக் கல்வி கூட பெற்றிராத அவரை அண்ணாமலை பல்கலைகழகத்தில் ஆசிரியராக வரும்படி அழைத்து பணியமர்த்தினார். பின் பண்டிதமணி தன் அறிவால் படிப்படியாக உயர்ந்து பல்கலைகழகத்தின் தமிழ்த்துறைக்கே தலைவராக உயர்ந்தார்.

“பண்டிதமணி”, “முதுபெரும் புலவர்”, “சைவ சித்தாந்த வித்தகர்”, “மகாமகோபாத்தியாய” ஆகிய மிக உயரிய பட்டங்களைத் தம் வாழ்நாள் பணிகளுக்காகப் பெற்றார். ஏழ்மை சூழல், முறையான கல்வியில்லை, கைகால் ஊனம் என பல குறைகள் அவரை வீழ்த்த காத்திருந்த போதும் அவர் மூச்சாக நம்பியிருந்த அவரது தமிழும் தளராத தன்னம்பிக்கையுமே அவர் அடைந்த உயரங்களக்கெல்லாம் மூலகாரணம்.

இளம்பிள்ளை வாதத்தால் இருந்தது, அந்த
ஒண்டமிழ்ப் புலவர்க்கு ஒருகால் ஊனம்; இல்லை-
ஒண்டமிழ்ப் புலமையில் ஒருகாலும் ஊனம்!
வடமொழியும் வண்ணத் தமிழும் வீற்றிருந்தன விரல் நுனியில்
நற்கருத்தும் நகைச்சுவையும் குமிழியிட்டிருந்தன குரல் நுனியில்!

பண்டிதமணி பற்றி கவிஞர் வாலி

கதிர்மணி விளக்கம் என்பது மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் மாணிக்கவாசகரின் **திருவாசகத்திற்கு** எழுதிய மிகச்சிறந்த விரிவுரை நூலாகும். திருவாசகத்தின் உட்பொருளை எளிய மற்றும் ஆழமான நடையில் விளக்கும் இந்த நூல், ஆன்மீக அன்பர்களாலும் தமிழறிஞர்களாலும் பெரிதும் போற்றப்படுகிறது.

இந்த நூலைப் பற்றிய முக்கிய குறிப்புகள்:

- **ஆசிரியர்:** பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் (தமிழிசை மற்றும் சைவ சித்தாந்தத்தில் புலமை பெற்றவர்).
- **உள்ளடக்கம்:** திருவாசகத்தில் இடம்பெற்றுள்ள **திருச்சதகம்**, **நீத்தல் விண்ணப்பம்**, மற்றும் **திருவெம்பாவை** ஆகிய பகுதிகளுக்கு நுட்பமான மற்றும் தெளிவான விளக்கங்களை அளிக்கிறது.
- **சிறப்பு:** திருவாசகத்தின் ஆன்மீக ஆழத்தையும், மாணிக்கவாசகரின் பக்திப் பெருக்கையும் வாசகர்கள் எளிதில் உணர்ந்துகொள்ளும் வகையில் இந்த உரை அமைந்துள்ளது.
- **பதிப்பகம்:** இந்த நூல் முதன்முதலில் 1953-ஆம் ஆண்டு மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை மற்றும் கோவிலூர் ஆண்டவர் நூலகத்தால் வெளியிடப்பட்டது.

இதன் மூலப் பிரதிகள் அல்லது பி.டி.எஃப் (PDF) வடிவங்களைப் பற்றிய கூடுதல் தகவல்களை Internet Archive மற்றும் Scribd தளங்களில் பார்வையிடலாம்.

278. கதிர்மணி பிறந்த தென்ன வுருத்திர கணிகை
மாராம்
பதியிலார் குலத்திற் றோன்றிப் பரவையா ரென்னு
நாமம்
விதியுளி விளக்கத் தாலே மேதகு சான்றோ
ரான்ற
மதியணி புனித னன்னாள் மங்கல வணியாற்
சாற்றி, 132

(இ-ள்.) கதிர்....தோன்றி - (அவ்வாறு அவதரித்த அவர்) கதிர்மணி பிறந்ததுபோல உருத்திர கணிகைகள் என்று சொல்லப்பெற்ற பதியிலாளர் குலத்திலே அவதரித்து; பரவையார் .... சாற்றி - பரவையார் என்கிற நாமத்தைச் சாத்திரவிதிப்படி வந்த விளக்கத்தினால் மிக்க பெரியோர்கள், பிறையணிந்து தூய இறைவனது நாளாகிய திருவாதிரை நாளிலே, மங்கல அணிகள் செய்து சாற்றக்கொண்டு.

(வி-ரை.) இப்பாட்டிலே, பேரிடுதல் - நாட்செய்தல் என்ற சடங்குகளைக் கூறினார். இவற்றை நாமகரணம், சாதகர்மம் என்பர் வடநூலார்.

கதிர்மணி பிறந்ததென்ன - (குலத்திலே) சிறந்த ஒளியுடைய மணிபிறந்தது போல, உருத்திரகணிகையர் குலத்தவர் யாவரும் அரன்சார்பும், அடியார் சார்பும் உடையர் ஆதலின் அவரனைவரும் மணிகளே. அவர்களுள்ளே சிறந்தமணி பிறந்ததுபோலத் தோன்றி என்க. 'முறுக வாங்கிக் கடைய' மணியிற் சோதி (கதிர்) பிறப்பதுபோல, இவர் அக்குலமாகிய மணியின் தவத்தாற் பிறந்தார் என்றுரைத்தலுமாம்.

உருத்திரகணிகைமாராம் பதியிலார்குலம் -

உருத்திரகணிகையர் என்ற பேருடைய பதியிலாதார் மரபு. இவர்கள் மரபு வேறு; சேரிப்பரத்தையர் மரபு வேறு. இவர்கள் செய்து வந்த கோயிற்பணிகளிற் சிலவற்றைப் பின்னாளிற் பரத்தையர் கைக்கொண்டனர் என்று சொல்ல இடமுண்டு.[1] விரிவு காமிகாகமம், ஆசாரிய லட்சணப் படலம் 225 முதல் 350 வரை சுலோகங்களிலும், பிற உரிய நூல்களிலும் காண்க.

இச்சை ஞானம் கிரியை என்ற சிவசத்திகள் மூவரின் நூபுரச் சத்தத்திலிருந்து முறையே உருத்திரகணிகை, உருத்திரகன்னிகை, உருத்திரதாசி என்ற மூவகையார் உண்டானார்கள் என்று காமிகாகமம் பேசும். இவர்களது இலக்கணங்களையும் ஒழுக்கங்களையும், இவர்கள் ஆலயங்களில் முறையே செய்ய வேண்டிய திருப்பணிகளையும், ஆங்கு விரிவாய்க் காணலாம். உருத்திரகணிகை, மகாமண்டபம் முதல் கருப்பாவரணப்பிராகாரம் வரை திருவலகு திருமெழுக்கு இட்டுப் பஞ்சசூர்ணங்களினால் அலங்கரித்துச், சுத்தமாயிருந்து, பூசை நேரங்களில் தீபங்களை ஏந்தியும், கானம் செய்தும், நிர்த்தனம் செய்தும், உபசரிக்கத்தக்கவள். சுத்தம், மிசிரம், கேவலம் என்ற மூவகை நிர்த்தனங்களிலே சுத்தநிர்த்தனமே உருத்திரகணிகைக்கு விதிக்கப்பெற்றது. ஆசாரியனால் பொட்டு அணியப் பெற்று அவனை நாயகனாகக்கொள்வதும் இவளுக்கு உரியதாம். இன்னும் இவ்வாறே துர்க்கை இலக்குமி சரச்சுவதி என்ற இவர்களுடைய பாதச் சிலம்பொலியினின்றும் முறையே இராசகணிகை, கிராமகன்னிகை, தாசி என்பவர்கள் உண்டானார்கள் எனவும் இவர்கள் இலக்கணம், கடமை, வாழ்க்கைத் திறம், மரபுவளர்ச்சி முதலியவை இன்ன எனவும் ஆங்கே விரிவாய்க் கூறப்பெற்றுள்ளன.

"உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம் உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம் அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்"	(9)
"எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேறற்க எங்கை யுனக்கல்லா தெப்பணியும் செய்யற்க"	(10)

என வரும் திருவெம்பாவைத் திருவாசகங்களையும் காண்க.

**“வெண்மதியின் கொழுந்தணிந்த வீதிவிடங்கப் பெருமான்
ஒண்ணுதலார் புடைபரந்த வோலக்க மதனிடையே
பண்ணமரு மொழிப்பரவை யார்பாட லாடறனைக்
கண்ணுறமுன் கண்டுகொண்டார் போலக் கருதினார்“**

- *ஏயர் - புரா* - 271

என்றதனால் இம்மரபினர் செய்யும் கோயிற் பணி விளங்கும். பின்னர்ப் பரவையாருக்கும் நம்பிகளுக்கும் கலியாணம் நிகழ்த்தும்படி அடியார்களை ஏவ, அவ்வாறே மணம் நிகழ்ந்தது என்பதனால் இத்தகைய கலியாணங்கள் இக்குலத்திலே அந்நாளில் வழங்கி வந்தமை உணரப்பெறும். “அன்றங் கவர்மன் றலைநீர் செயும்“, “மங்கை பரவை தன்னைத் தந்தோம்“, “அணியஃ தாரூ ரன்பான் மணம்“, “பரவை வதுவை தகுநீர்மையினால் நிகழச் செய்தார்“ என வருவன காண்க.

உண்மை இவ்வாறாகவும், பண்டைநாளில் இவர்களுக்கு மரபு வளர்ச்சி கிடையாது என்றும், உலக வாழ்விற்குத் தகுதியற்ற பெண்கள் இறைவனையே பதியாகக் கொண்டொழுகினர் என்றும், பின் மற்றும் சிலர் அவர்களோடு கலத்தலாகி உலக இன்பம் துய்த்துக்கொண்டு இறைபணி செய்ய எண்ணினர் என்றும், பின்னாளிற் கோயிற்றலைவர்களின் அடக்குமுறையால் கொடுமைக்கு ஆளாகி நாளடைவில் வேசையராயினர் என்றும் இவ்வாறு எழுந்த ஆராய்ச்சிகள் உண்மை நிலைக்கு மாறானவை என்று காணலாம்.

பதியிலார் குலங்கள் மேற்கூறியவாறு பலவாதலின் அவற்றினுள்ளே பிரித்துக் காட்ட உருத்திர கணிகைமாராம் என்று கூறினார்; பிறிதி னியைபு நீக்கிய விசேடணம். பதியிலாளர் - என்பது கல்வெட்டுக்களிற் கண்ட பெயர்.

“உருத்திரகணிகையர் பரமசிவனுக்குத் தாங்கள் செய்ய வேண்டிய ஊழியஞ் செய்துகொண்டு மணமின்றி ஒருவரையே கணவராக வுடையவர்கள். இக்காலத்தில் அந்த நடை தவறிற்று“ என்பது திரு. மகாலிங்கையர் உரை. “தனக்கொரு நாயகனில்லாத உருத்திரனைப்போல் இவ்வுலகில் தமக்கு நாயகனைக் கொள்ளாமல் உருத்திர நாயகியை நாயகமாகக் கொண்டிருக்கும் உருத்திர கணிகையர்களுடைய குலம்“ என்பர் திரு. ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்கள். “உருத்திரகணிகையர் - வேசியர்க்கு வேறாய் மணமின்றி உயர்ந்த சாதியர்களில் ஒருவனைக் கணவனாகக் கொண்டு பூசா

காலத்தில் சுத்த நிருத்தஞ் செய்யும் மகளிர்கள்" என்பது ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரானார் உரையிற் கண்டது. பதியிலார் குலம் என்பதற்குத் "தங்கட்கு ஒரு நாயகனையும் எய்தாதவர்களாகிய உருத்திர கணிகையர் குலம்" என்று பொருள்கூறி "இதனாற் பல புருடரைச் சேர்ந்து விபசரிக்கும் வேசியரையே உருத்திர கணிகையாக மயங்கியது அஸங்கதமாயிற்று. விபசாரஞ் செய்வோர் வேசியரே யன்றித் தாசியரன்று. அவ்வேசியரைத் தாசியராகக் கோடல் தவறு. காலகதியால் பிரகிருதத்தில் வேசியரே தாசியரராக நியமிக்கப்படுகின்றனர். தாசியரும் வேசித் தொழில் புரிகின்றனர். இவ்வநிஷ்டாசாரம் பிரமாண மாகாது..." என்று மேற்கோளும் காட்டினர் திரு. கு. சுப்பராய நாயகர் அவர்கள். இவ்வுரைகளை மேலே காட்டிய முதனூற்பிரமாணங்களுடன் ஒப்புநோக்கி உண்மை தெளிக.

குலத்தில் தோன்றி - குலத்தில் ஒருவருக்கு மகளாய் அவதரித்து. இவரது தாயார் பெயர் கூறப்படாததாலும் குலத்தில் என்றமட்டிலே கூறப்பெற்றதன்றி ஒருத்தி வயிற்றில் என்று கூறப்பெறாததாலும் பாவையார் ஒரு தாய்வயிற்றினல்லாது அயோ நிசராக அவதரித்தார் என்று கொள்வாருமுண்டு. முன்னர்க்கூறிய நம்பிகள் திரு அவதாரமும், அதுபற்றிய அவர்களது தேவாரங்களும், பின்னர் வருஞ் சங்கிலியார் திரு அவதாரமும் ஒப்புநோக்கிக் காணப்புகின் இக்கொள்கை வலியுடைத்தன்று என்பதாம்.

விதியுளி விளக்கத்தால் - நூல்களில் விதிப்படி விளங்கினவாறு. இவை நாம கரணத்துக்கு உரிய நூல்விதிகள். இதனை இடைநிலைத் தீவகமாய்ச் சாதகருமத்துக்கும் கொள்க.

மேதகு சான்றோர் - மேன்மை பெற்ற தக்க பெரியோர். பேர்வைத்தலும் சாதகருமம் செய்தலும் கற்றுத் தேர்ந்த பெரியாரைக் கொண்டு செய்தல் முறை. சுற்றத்தார்கள் பிள்ளைக்குரிய பிற பருவவிழாக்கள் செய்தற்குரியர் என்பது வரும்பாட்டிற் காண்க.

மதியணி புனிதன் - சிவபெருமான். நன்னாள் - அவனுக்குரிய நாள் - திருவாதிரை. உருத்திரகணிகையாதலின் உருத்திரனுக்குரிய இந்நாளைக் குறித்தனர் என்பர்.

நாமம் - நாமகரணச்சடங்கினையும், நன்னாள் - அது செய்த நாளையும் குறிக்கும். சாற்றி - சாற்ற. "நாமகரணத்தழகு நாள்பெறநிறுத்தி" திருஞான - புரா - 41 என்றது காண்க. 132.

---

[1] **இவைபற்றிப் பற்பலவாறு ஆராய்ச்சிகள் எழுந்து பெருமயக்கிற் கிடந்தந்தன. இவ்விருசாராரையுமின்றிப் பெண்கள் தம்மை இறைவன் பணிக்கே ஒப்புவித்துத் துறவு பூண்டு ஒழுகியவர்களுமுண்டு. அன்னார் எக்குலத்தாராயினும் ஆகலாம். அவர் மேற்கூறிய இருமரபினருடன் மயங்கியறிதற்பாலரல்லர். முதலிற் பெண்டிர் துறவிகளாயிருந்து, பின்னர் மரபு வளர்ச்சிக்குரிய உருத்திரகணிகையராகி, அதன்பின் அவர்களே நாளடைவில் பரத்தையர் குலத்தவராயினர் என்று கூறுவாருமுண்டு. இவையெல்லாம் ஒரு கருத்தை வைத்துக் கொண்டு அதற்கேற்பச் செய்திகளைப் பொருத்தி முடிபுகள்செய்யும் தவறான ஆராய்ச்சிமுறையாம். பரத்தையர் சேரியும், பரத்தையிற் பிரிவும் தொல்காப்பிய முதலிய மிக்க பழந்தமிழ் நூல்களிற் பல்லாயிர ஆண்டுகளின் முன்னரே பேசப்பெற்றன. "ஏமப்பேரூர்ச் சேரியுஞ் சுரத்துந், தாமே செல்லுந் தாயரு முளரே", "…. பரத்தையி னகற்சியிற் பரிந்தோட் குறுகி, யிரத்தலுந் தெளித்தலு மெனவிரு வகையோ, டுரைத்திற நாட்டங் கிழவோன் மேன" என்பன முதலிய தொல்காப்பிய அகத்திணையியற் சூத்திரங்களையும், அவற்றின்கீழ் ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரையையுங் காண்க. இவற்றிற் கிலக்கியங்களாகிய திருச்சிற்றம்பலக் கோவையார் முதலியவற்றிற் காணும் பரத்தையிற்பிரிவு முதலிய துறைகளையுங் காண்க.**

நூலின் முழுமையான தகவல்கள்

திருச்சதகம் : கதிர்மணி விளக்கம் /

மு திருவாசகம். கதிரேசச் செட்டியார்

Author / ஆசிரியர் :

: கதிரேசச் செட்டியார்,மு

A.Category / ஆ.வகை :

:

Publisher / பதிப்பகம் :

: மேலைச் சிவபுரி : சன்மார்க்க சபை

Year / ஆண்டு :

: 1985

Page &Size / பக்கம் &அளவு :

"பண்டிதமணியின் திருவெம்பாவை உரைத்திறன்"

PUBLISHED JANUARY 8, 2010 • BY
முனைவர்,சி,சேதுராமன் , இணைப் பேராசி¡¢யர்,
மா, மன்னர் கல்லூ¡¢, புதுக்கோட்டை.

https://old.thinnai.com/%E2%80%98%E2%80%98%E0%AE%AA%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%A3%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B5%E0%AF%86%E0%AE%AE/

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழிலக்கிய வரலாற்றை வளப்படுத்திய பெருமக்களுள் பண்டிதமணி மு.கதிரேசனார் குறிப்பிடத்தக்கவர். வடமொழியும், தமிழும் வல்ல இவர் திருவாசகத்தின் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை ஆகிய மூன்று பகுதிகளுக்கு மட்டும் உரை இயற்றியுள்ளளார். பண்டிதமணியாரின் இவ்வுரை 'கதிர்மணி விளக்கம்' என்று வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. பண்டிதமணியாரின் உரை உள்ளுணர்விலிருந்து பிறந்து அனுவபத்தை வெளிப்படுத்துகின்றது என்பர்; அறிஞர். பண்டிதமணியின் திருவெம்பாவை உரை நயமுடையதாகவும் அவரது மதிநுட்பத்தினை விளக்குவதாகவும் அமைந்துள்ளது.

பண்டிதமணியின் உரை, கருத்துரை, பதவுரை, விளக்கவுரை என்ற மூன்று நிலைகளில் அமைந்திலங்குகிறது.“ஒவ்வொரு திருப்பாட்டிற்கும் கருத்துரைத்தல், கண்ணழித்தல், பொழிப்புத்திரட்டல், அகலங்கூறல், என்னும் நான்கு வகையாகக் கொண்டு உரைவிளக்கம் செய்யப்படும். அவற்றுள் கருத்துரைத்தலாவது, திருப்பாட்டை அடுத்து அதன் திரண்ட கருத்தையும் முன்னைத் திருப்பாட்டோடு உள்ள இயைபையும் சுருக்கிக் கூறுதலாகும். கண்ணழித்தல், என்பது பதப்;பொருள் சொல்லுதல், பொழிப்புத் திரட்டலைவிட்டு அவற்றிற்குச் சொல்லிய பொருள்களைத் திரட்டிக் காட்டுதல்;. இவ்விரண்டு வகையும் பதப்பொருள் கூறுமுகமாக அமையும் ஆதலின் விரிவஞ்சிப் பொழிப்புத் திரட்டுதலைத் தனியே கூறினோம் அல்லேம். அகலங்கூறலாவது, திருப்பாட்டின் பொருளைத் தூய்மை செய்தற்கு வினாவிடை உள்ளுறுத்தும், ஆற்றன் முதலியவற்றாலும் குறிப்பாலும் சொற்களின் அமைந்து கிடக்கும் பொருள் நயங்களை விளக்கியும், இன்றியமையாத இடங்களில் மேற்கோள் காட்டியும் விளக்கிக் கூறுதலாகும். இம் மூன்றும் முறையே கருத்துரை, பதவுரை, விளக்கவுரை என உரிய இடங்களில் எடுத்தாளப்படும்” எனப் பண்டிதமணி திருச்சதகத்திற்கு எழுதிய உரைத்தொடக்கத்தில் தம் உரை நெறியைக் குறித்து விளக்கி உள்ளார்.

இவ்வுரை முறையினையே அவர்தாம் எழுதிய கதிர்மணி விளக்கப் பேருரைகளிலும் கையாண்டுள்ளார். கருத்துரை பாட்டைத் தெளிவுபடுத்துகின்றது. பதவுரை சொல்லின் பொருளை எடுத்துக் காட்டுகின்றது. விளக்கவுரை சொல்லின் நயத்தையும், பொருளின் நுட்பத்தையும் விளக்கிக்காட்டுகின்றது.

முன்னைத் திருப்பாட்டில் இறைவனது அருமையில் எளிய அழகிலே மொழியாற்பாராட்டுதற்குரிய எளிமையைப் பெண்மக்கள் மொழிமூலம் புலப்பட அருளிச் செய்த அடிகள், இத்திருப்பாட்டில் நெஞ்சத்தால் நினைந்து உருகுதலாகிய எளிமையை அவ்வாறே அருளிச் செய்கின்றார்” (ப.31) என்பது பண்டிதமணி திருவெம்பாவையின் நான்காம்பாடலுக்கு எழுதியுள்ள கருத்துரையாகும். இதில் அவர் பாடலின் திரண்ட கருத்தினையும் முன்னைப் பாடலோடு இப்பாடலுக்கு உள்ள இயைபினையும் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

பாடல்களுக்கு உரை எழுதும்போது பண்டிதமணி சில சொற்களுக்குக் கூறுகின்ற பொருள் விளக்கம் சிறப்புற அமைந்து அவருடைய உரைத்திறனை நன்கு வெளிப்படுத்துகின்றது. இதனை, “திருவென்பது

தெய்வத்தன்மை யென்னும் பொருளுடைய மங்கல அடைமொழியாகும்''(ப.1)

''புரளுதல்-விழிப்புண்டாதற்குத் தொடங்கும் முதற்செயல், அஃது ஈண்டு இலக்கணைச் சொல்லாக நின்று எழுதலைக் குறிக்கும்'' (ப.6) என்ற பகுதிகள் விளக்குவதாய் அமைந்துள்ளன.

சொல்லுக்குப் பொருள் கூறும்போது தம் கருத்துக்கு அரணாகப் பண்டைய உரையாசிரியரின்; குறிப்பையோ, இலக்கியச் சான்றையோ எடுத்துக் காட்டுவது பண்டிதமணியின்; உரைஉத்தியாகும்.

''தோழம்-பேரெண். 'ஒரு தோழந் தேவர் விண்ணிற் பொலிய' (திருஞான. தேவ. 1-74-7) என்பது தமிழ் மறை'' (ப.58) என்று திருவெம்பாவை உரையின் இடையே வரும் பகுதி இவ்வகையில் குறிப்பிடத்தக்கதாகும்.

பண்டிதமணியின் திருவெம்பாவை உரை அவரது பரந்துபட்ட தமிழிலக்கண இலக்கிய சமய நூலறிவைத் தெளிவுறுத்துவதாக அமைந்துள்ளது. பண்டிதமணி தமக்கு முன் வாழ்ந்த நூலாசிரியர்களைப் 'பெரியோர்' என மதிப்போடு சுட்டுகின்றார்; அவர்களது நூல்களைத் 'தமிழ்மறை' என்றும், 'சிவநெறிப் பனுவல்' என்றும் ஆர்வத்தோடு குறிப்பிடுகின்றார். அவர்களது கருத்துக்களை, 'அருளுரை' என்றும், 'பொருளுரை' என்றும், திருவாக்கு என்றும் கூறுகின்றார்.

திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சேக்கிழார், சிவஞானமுனிவர், தாயுமானவர், இராமலிங்க அடிகள், நம்பியாண்டார் நம்பி, பரஞ்சோதியார், குமரகுருபரர் ஆகிய சிவநெறிச் செல்வர்களின் பாடல்களைப் பண்டிதமணி தம் திருவெம்பாவை உரையுள் பல இடங்களில் மேற்கோள் காட்டியுள்ளார். திருநாவுக்கரசர் தேவாரத்தை அவர் 12 இடங்களில் எடுத்தாண்டுள்ளார்.

சைவ சாத்திரங்களுள் மெய்கண்டார் இயற்றிய சிவஞானபோதத்தை 5 இடங்களிலும், அருணந்திச் சிவாச்சாரியார் இயற்றிய சிவஞானசித்தியாரை 10 இடங்களிலும் பண்டிதமணி மேற்கோள் காட்டியுள்ளார். சிவஞான மாபாடியத்திலிருந்தும் அவர் மேற்கோள் காட்டியுள்ளார்.

பண்டைத்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்திலிருந்தும், திருமுருகாற்றுப்படை, பட்டினப்பாலை, திருக்குறள், நான்மணிக்கடிகை,

சிலப்பதிகாரம், நைடதம், ஆகிய இலக்கிய நூல்களிலிருந்தும் பண்டிதமணி பொருந்திய மேற்கோள்கள் பலவற்றை எடுத்துக்காட்டியுள்ளார். அவர் திருக்குறளை 8 இடங்களில் மேற்கோள் காட்டியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

பண்டைய உரையாசிரியர்கள் பால் பெருமதிப்புக் கொண்டவர் பண்டிதமணி. அவர்தம் திருவெம்பாவை உரையின் இடையிடையே அரும்பத உரையாசிரியர், சிவஞானமுனிவர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், பரிமேலழகர் ஆகிய உரையாசிரியர்களின் கருத்துக்களை மேற்கோள்காட்டியிருப்பதனால் இதனை நன்கு உணரலாம். பரிமேலழகர் உரையைப் பண்டிதமணி மூன்று இடங்களில் மேற்கோள்காட்டியுள்ளார்.

திருவாசகத்தின் பிற பகுதிகளில் இருந்து பதினான்கு இடங்களில் இருந்தும் திருக்கோவையாரிலிருந்தும் (ப.84) பண்டிதமணி மேற்கோள் காட்டியுள்ளார். "பக்தி வலையிற் படுவோன்" (ப.14) 'அருமையில் எளிய அழகு' (ப.19) 'அவனருளே கண்ணாகக் காணில்லால்' (ப.38) போன்ற திருவாசகத் தொடர்களை அவரது உரையில் பரக்கக் காணலாம்.

"தமிழும் வடமொழியும் கற்றவர்களில் முதன்முதல் பெரும் பேராசிரியர் (மகாமகோபாத்தியாயர்) என்னும் பட்டம் பெற்றவர் பண்டிதமணியே" என்பார் கா.சுப்பிரமணியபிள்ளை.

பண்டிதமணியின் வடமொழிப்புலமையைக் காட்டும் சான்றுகள் பல திருவெம்பாவையில் காணப்படுகின்றன. அவர் திருவெம்பாவையின் தொடக்கத் திருப்பாட்டுக்கு எழுதிய விளக்க உரையில், அருட்பெருஞ்சோதியாக விளங்கும் இறையியல்பைக் குறித்துச் சிவானந்த லகரி என்னும் வடமொழி நூலில் சங்கராசாரிய சுவாமிகள் கூறிய ஒரு சுலோகக் கருத்தினை எடுத்துக்காட்டியுள்ளார்.

"பசுபதியாகிய இறைவ! தாமரை நாயகனாகிய ஒரு சூரியன் விண்மண் முழுதும் நிறைந்த பெரிய இருட் குழுவையோட்டிக் காண்பார் கண்களுக்கும் புலனாகின்றான்; நீ கோடி சூரியவொளியுடையவனாக இருந்தும், கண்களுக்கும் புலனாகாமையோடு சிறிய என் அகவிருளையும் போக்குகின்றாயல்லை. என் அகவிருள் நின்னால் ஒழிக்க இயலாத அத்துணை வலியை எங்ஙனம் உடையதாகும்? ஆதலின், அஞ்ஞானம் முழுவதையும் ஒழித்துக் காட்சி தந்தருளவாயக (ப.14) என அச்சுலோகக்

கருத்தினைத் தமிழில் அழகுற மொழி பெயர்த்துத் தந்துள்ளார். இப்பகுதி பண்டிதமணியின் வடமொழிப் புலமையைக் காட்டுவதோடு, அவரது மொழிபெயர்ப்புத் திறனையும் ஒருங்கே உணர்த்துவதாகும்.

“பிறர் கருத்தைச் சுட்டியும் மறுத்தும் எழுதித் தம் கருத்தை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு ஓர் உரையாசிரியருக்கு உண்டு” என்பர் அறிஞர். பண்டிதமணி தம் திருவெம்பாவை உரையில் பிறர் கருத்தைச் சுட்டும் இடங்களே காணப்படுகின்றன. மறுக்கும் இடங்கள் காணப்படவில்லை.

“பாசம் பரஞ்சோதிக்கு என்பாய்’ என்பது திருவெம்பாவையில் வரும் இரண்டாம் பாடலின் தொடக்கவரி. இவ்வரிக்கு எழுதிய விளக்கவுரையில் பண்டிதமணி, ‘என்பாய் என்பதற்கு எலும்பாகக் கரையுமாறு எனப்பொருள் கூறுவாருமுளர்” (ப.21) எனப் பிறர் கருத்தினைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்டிதமணி திருவெம்பாவை உரையின் இடையிடையே தம் காலத்து வழங்கிய பாட வேறபாடுகளையும் சுட்டிச் செல்கிறார்.

“மானே நீ நென்னலை நாளைவந்து உங்களை

நானே எழுப்புவன் என்றலுமே நாணாமே

போன திசை பகராய்; இன்னம் புலர்ந்தின்றோ”

என்னும் வரிகள் திருவெம்பாவையின் ஆறாம் பாடலில் வருவனவாகும். இப்பாடலுக்கு எழுதிய விளக்கவுரையில் பண்டிதமணி, “என்றலும் நாணாமே” என்பதும் பாடம்” எனப் பிறிதொரு பாடம் வழங்குவதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

ஒரு வினாவையும் அதற்கு இறுக்கும் விடையையும் ஒருங்கு சேர்த்து உரைநடையில் அமைக்கும்போது அவற்றை,‘எனின்’ என்ற சொல்லாலே தொடுத்து, ‘என்பது’ என்ற சொல்லால் முடிப்பது பண்டைக்காலத்தில் பெரு வழக்காக இருந்தது. பண்டைய உரையாசிரியர்களிடம் காணப்படும் இவ்வழக்கினைப் பண்டிதமணியின் உரையிலும் காண முடிகின்றது. இதனை,

“இதன்கண் ‘மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்து’ என்றதனால் சக்தியை வியந்தது என்னும் உள்ளுறை குறிப்பிற் புலப்பட வைத்தவாறாம். என்னை? இறைவன் திருவடி இறையருளாகிய சிவசக்தியைக்

குறிக்குமாதலின், திருவடி வாழ்த்துச் சக்தியை வாழ்த்தியதாகுமென்பது''(ப.18)

என்ற பகுதி தெளிவுறுத்துகின்றது.

பலருக்கும் எளிதில் விளங்கும் உலகியல் நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டி உரை விளக்கம் எழுதிச் செல்லும் போக்கினை பண்டிதமணியின் 'கதிர்மணி விளக்க'ப்; பேருரையில் காணலாம்.

பண்டிதமணி தம் திருவெம்பாவை உரையுள் ஆங்காங்கே பொருள் புலப்பாடு கருதியும், அணிநயம் கருதியும் சிறந்த உவமைகளையும் கையாண்டுள்ளார். இதனை,

''இடையறவின்றிப் பெய்யும் மழைநீரை மேட்டுநிலம் வறிதே கழிப்பப் பள்ள நிலம் தாங்கிப் பயன் விளைத்தல் போல ஆண்டவன் திருவிளையாட்டாற் பெய்யும் அருளமுதத்தைத் தூய்மை பெறாத உள்ளத்தினர் விட்டொழிக்க மெய்யன்பினால் தூய்மைபெற்ற நன்னெஞ்சினர் பெற்றுப் பயன்பெறுவர்''(ப.63).

என்ற பகுதி தெளிவுறுத்துகின்றது.

உரைவிளக்கம் கூறிப்போகும்போதே பண்டிதமணி இலக்கணக் குறிப்புகளையும் இடையிடையே எழுதிச் செல்கின்றார். ''ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ்சோதியை'' என்ற முதற் திருப்பாட்டின் உரையில் அவர்,'' பத்தி வயப்பட்டு உருகி மெய்மறந்து கிடந்தாளை அவள் இல்லத்திற்கண்டு அவளையும் உடனழைத்துக் கொண்டு சென்றனர் ஆதலின் அவளைச் சுட்டி இவள் என்னாது ''ஏதேனும் ஆகாள் இங்ஙன் கிடந்தாள்'' என்று கூறி முடித்தனர். தம் குழவிற் கூடியிருத்தலின் சுட்டுப் பெயராகிய எழுவாயின்றிச் சுட்டிக் கூறிப் பயனிலையளவில் அவள் செயல் கூறப்பட்டதென்க. இவள் என்னும் சுட்டுப்பெயர் ஈண்டுத் தோன்றா எழுவாயாகும்'' (ப.17) என்று மொழிகுவார்;.

இவ்வாறு தமது அனுபவத்தாலும் நுண்மாண் நுழைபுலத்தாலும் உரைவகுத்த பண்டிதமணியாரின் உரை தமிழன்னைக்குப் புகழ் சேர்க்கும் மணிமகுடமாகத் திகழ்கிறது. மேலும் இவ்வுரை தமிழறிஞர்களால் இன்றும் என்றும் படித்துச் சுவைத்தற்குரியதாகவும் விளங்குகிறது.

முனைவர் சி.சேதுராமன், இணைப் பேராசி¡¢யர், மா.மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை,

பண்டிதமணி கதிரேசன் செட்டியார்

https://koottanchoru.wordpress.com/2009/05/07/%E0%AE%AA%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%A3%E0%AE%BF-%E0%AE%95%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%87%E0%AE%9A%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%9A%E0%AF%86%E0%AE%9F%E0%AF%8D/

இவரை பற்றி திண்ணை தளத்தில் வந்த ஒரு கட்டுரை இங்கே.

சேதுராமனின் அடுத்த பதிவு தொடர்கிறது.

தமிழ் வளர்ந்த வரலாற்றில் செட்டி நாட்டிற்குத் தனி இடமுண்டு. கடல் கடந்து தமிழ் வளர்த்த பெருமையும், திரை கடலோடியும் திரவியம் தேடு என்ற சொற்றொடரை உருவாக்கிய பெருமையும் நகரத்தார்களுக்கே. வெளி நாடுகளில் வணிகத்தை வளர்த்தவர்கள் அதனோடு தமிழ் மொழி, பண்பாடு முதலியவை நிலைத்து வளரவும் வித்திட்டார்கள். இத்தகைய பெருமைகளைப் பெற்ற நகரத்தார் குடியில் தமிழறிஞர்கள், தமிழ் வளர்த்த சான்றோர்கள் பலர் இருந்தனர். அந்தத் தமிழறிஞர்களில் சிறப்பு பெற்ற ஒருவர்தான் **பண்டிதமணி கதிரேசன் செட்டியார்** அவர்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில், நகரத்தார்களின் தொண்ணுற்றாறு ஊர்களில் ஒன்றாக விளங்கும் மகிபாலன்பட்டி என்ற சிற்றூரில் 1881ம் வருடம், அக்டோபர் மாதம் பதினாராம் தேதி பிறந்தவர் கதிரேசன். இவருடைய பெற்றோர், **திரு. முத்துக் கருப்பன் செட்டியார், சிவப்பி ஆச்சி** என்பவர்கள்.

கதிரேசன் பிறந்து இரண்டாண்டுகள் வரை நல்ல உடல் நலத்தோடுதானிருந்தார். மூன்றாம் வயதில் அவரை இளம்பிள்ளைவாதம் தாக்கியது. இந்த நோய் காரணமாக கதிரேசன் அடுத்த நான்கு ஆண்டுகள் பள்ளிகளில் சேர முடியவில்லை.. அதன் பிறகே அவர் ஒரு திண்ணைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். ஆயினும் உடற் குறை காரணமாகவும். குடும்பச்சூழல் காரணமாகவும் பண்டிதமணியால் தொடர்ந்து பள்ளி சென்று படிக்க முடியவில்லை. எனினும் தாமாகவே முயன்றும் தக்க ஆசான்களின் உதவியுடனும் பல நூல்களைப் படித்தார். சோழவந்தான் **அரசன் சண்முகனார்** பண்டிதமணியின் ஆசான்களில் முக்கியமானவர். சண்முகனார் தொல்காப்பியம் முதலான பழந்தமிழ் நூல்களின் நுணுக்கங்களை ஆராய்ந்து உணர்த்துவதில் ஆற்றல் வாய்ந்தவர். தன் ஆசான் சண்முகனாரைப் பற்றி பண்டிதமணி குறிப்பிடுகிறார் – “இலக்கியங்களாகிய செய்யுள்கட்கு யான்

பொருளுணர்ந்து கொண்டேனெனினும் தொல்காப்பியம் முதலிய நூல்களோ, சேனாவரையர் போன்றோரின் உரைகளோ என் அறிவிற்கெட்டாத ஆழமுடையனவாக இருந்தன. பற்பல செய்திகள் எனக்கு விளங்காப் புதிராகவே இருந்தன. இவ்வியல் நூல்களை ஐயந்திரிபறக் கற்றாலன்றி புலமை நிரம்பியதாகாதெனவும் அறிந்து கொண்டேன். ஆசிரியரை யான் அவாவியிருந்த காலத்தே, திருவருளின் உதவியால் அரசன் சண்முகரின் அறிமுகம் கிடைத்தது. அவருடைய நுண்மாணுழை புலத்தையும், இயல் நூலறிவையும் உணர்ந்து யான் பெரிதும் வியந்தேன்."

சண்முகனார் மூலம் **மு.ரா. கந்தசாமிக் கவிராயர், வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், மறைமலையடிகள்** போன்ற சான்றோருடன் பண்டிதமணி தொடர்பு கொண்டார். அக்காலத்தில் தலை சிறந்த சொற்பொழிவாளர் என அனைவராலும் பாராட்டப் பெற்ற **ஞானியார் அடிகளை,** மறைமலையடிகள் மூலம் அறிமுகம் பெற்றவர் ஞானியாரின் சொல் இனிமையும் கருத்தாழமும் நிறைந்த பேச்சுக்களைக் கேட்ட பின்னர், தாமும் அவ்வாறு பேச வேண்டும் என்று விரும்பிய பண்டிதமணி, ஞானியாரின் பாணியிலேயே தாம் பேசும் ஒவ்வொரு சொற்பொழிவுக்கும் உரிய குறிப்புகளை ஒழுங்குபடுத்தி வைக்கும் முறையையும், குறிப்பெடுத்து நிரல் படப் பேசும் வழக்கத்தையும் மேற்கொண்டார்.

பண்டிதமணி தமிழ்மொழியையும், சைவ சமயத்தையும் போற்றியவர். சைவ சமய சாஸ்திரங்களையும், சிவாகம நூல்களையும், அத்துறையில் வல்லவரான ஒருவரிடம் முறையே கற்க வேண்டும் என விரும்பி, அப்போது சிறந்து விளங்கிய **காரைக்குடி சொக்கலிங்கனாரிடம்** இரண்டு ஆண்டுகள் சைவ சமயப் பெரு நூல்களைப் பயின்று, சமய அறிவும் நிரம்பப் பெற்றார்.

தமிழ் மொழியிலுள்ள பல்வேறு இலக்கண, இலக்கிய நூல்களைக் கற்றுத் தேர்ந்த பண்டிதமணி, சிவஞான யோகிகளின் சிவஞான போதப் பேருரை முதலான தோத்திர நூல்களை நன்கு கற்றறிவதற்கு வட மொழிப் பயிற்சி இன்றியமையாதது என்று உணர்ந்தார். வட மொழியில் வல்லுநரான **தருவை நாராயண சாஸ்திரியார்** என்பவரை ஆசிரியராகக் கொண்டு ஐந்தாண்டுகள் வட மொழியில் உள்ள உயர்ந்த காவியங்கள், நாடகங்கள் முதலான பல்வேறு இலக்கியங்களையும், பாணினி, வியாகரணம் போன்ற இலக்கண நூல்களையும் கற்றார்.

தாம் வாழும் செட்டி நாட்டுப் பகுதியில் தமிழை வளர்ப்பதற்கும் சமயப்பணி புரிவதற்கும் ஒரு சங்கம் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தைச் செயல்படுத்த விரும்பிய பண்டிதமணி 1909ம் ஆண்டு **சன்மார்க்க சபை** என்ற அமைப்பை சோழவந்தான் புலவர் அரசன் சண்முகனார் தலைமை தாங்க, நிறுவினார்.

கூடியிருந்த அவையோரின் விருப்பப் படி இச்சபை **மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை** எனப் பெயரிடப் பட்டது. செட்டி நாட்டில் நிறுவப் பட்ட முதல் சபை இது. சபையின் உயர்ந்த நோக்கங்களில் சில – சிறந்த புலமையாளர்களை அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்தல், மாணவர்களுக்கு நல்ல முறையில் கல்வி பயிற்றுவித்தல், தமிழ் வட மொழிகளில் சிறந்த நூல்களைத் தொகுத்துரைத்தல், கல்வி ஒழுக்கம் பற்றிய கருத்துக்களை அச்சிட்டு இலவசமாக வழங்குதல், இலக்கண இலக்கிய சமயத் தொடர்பான இதழ்களை வருவித்துப் படிக்கத் தூண்டுதல்.. பண்டிதமணியின் முதல் நூலாகிய **நாட்டுக் கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம்** சபையின் இரண்டாவது ஆண்டு வெளியிடப் பெற்றது.

பண்டிதமணி தனது முப்பத்தியிரண்டாவது வயதில் தனது அத்தையின் மகள் மீனாட்சியை மணந்து கொண்டார். பண்டிதமணி மீனாட்சி தம்பதிகளுக்கு, நான்கு மகன்களும், மூன்று பெண்களும் பிறந்தனர்.

1929ம் ஆண்டு செட்டி நாட்டரசர், தமது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குப் பேராசிரியராக வரும்படி **டாக்டர் உ.வே.சாமிநாதையரைக்** கேட்டுக் கொண்ட போது, அவர் "தங்கள் பல்கலைக் கழகத்திலே தமிழ்ப் பேராசிரியராக இருக்கும் தகுதியுடையவர்கள் இருவர் – ஒருவர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார், மற்றொருவர் ரா. ராகவையங்கார் – இருவருமே இரு மொழிப் புலமை படைத்து விளங்கும் தமிழ்ப் பேராசிரியர்கள்" என்றதும், செட்டி நாட்டரசர் பண்டிதமணியை விரும்பியழைத்தார். அழைப்பை மறுத்த பண்டிதமணியை முதலில் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைக்கு அறிவுரை கூறும் குழுவில் நியமித்தார். பின்னர் 1934ம் ஆண்டு பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியராகப் பதவியேற்றார். 1946ம் ஆண்டு வரை பன்னிரண்டாண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திறம்படப் பணியாற்றினார் பண்டிதமணி.

1925ல் மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையளித்த பட்டம் தான் **பண்டிதமணி** – 1942ம் ஆண்டு மத்திய அரசு இவருக்கு **மகா மகோபாத்தியாய** என்ற பட்டமளித்தது. 1951ல் **குன்றக்குடி ஆதீனம்** இவருக்கு **சைவ சித்தாந்த வித்தகர்** என்ற பட்டத்தையும், தமிழ்ப் புலவர் மகா நாடு **முது பெரும் புலவர்** என்ற பட்டத்தையும் வழங்கின.

ஆன்மிகப் பணியும் தமிழ்ப் பணியும் தம் வாழ் நாள் பணிகளாகக் கொண்டு வாழ்ந்த பண்டிதமணி கதிரேசன் செட்டியார் 1953ம் ஆண்டு அக்டோபர் 24ம் தேதி இறைவனடி சேர்ந்தார்.

பண்டிதமணி இயற்றிய நூல்களின் விவரம்:

உரை நடைக் கோவை (முதற்பகுதி) சமயக் கட்டுரைகள் *
உரை நடைக் கோவை (இரண்டாம் பகுது) இலக்கியக் கட்டுரைகள்*
மணிமலர்த் திரட்டு (முதல் நான்கு) கட்டுரைகள்
நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம் (1911)
திருவாசகம் விளக்கம் *
திருச்சதகம் விளக்கம் *
நீத்தல் விண்ணப்பம் *
திருவெம்பாவை விளக்கம் *
பதிற்றுப்பத்தந்தாதி

மொழிபெயர்ப்புகள்:

கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் (கௌடலீயம் – பொருணூல்)
சுக்கிர நீதி *
மண்ணியல் சிறு தேர் (ம்ருச்ச கடிகம்)
உதயன சரிதம் *
சுலோசனா *
மாலதி மாதவம்
(* இக்குறியிட்ட நூல்கள் மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையினால் வெளியிடப்பட்டவை)

நன்றி தகவல்:

1. திரு. சுப்பிரமணியம் (பண்டிதமணியின் பேரர்)
2. இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் – ஆசிரியர் திருமதி நிர்மலா மோகன், சாகித்திய அகாதெமி வெளியீடு 2006
3. புதுவை ஞானம் திண்ணை.காம் வலைத்தளத்தில் எழுதிய கட்டுரை
4. பண்டிதமணி அவர்கள் திருவுருவச் சிலை திறப்பு விழாமலர் 1974) — புகைப்படம் நன்றி திரு. சுப்பிரமணியம்
5. சேதுராமன் சொல்லி, விட்டுப் போன ஒரு ரெஃப்ரென்ஸ் – வ்லைத் தளத்தில் பண்டிதமணி பற்றிய தகவல்கள் தேடுகையில், முதலில் தென்பட்டது, அவரது ஃபோட்டோ தான் – my great grand father என்ற குறிப்புடன் – இந்தப் புகைப்பட காலரியில், மகிபாலன்பட்டி கிராமத்திலுள்ள பண்டிதமணியின் இல்லம், செட்டி நாட்டு வீட்டு அமைப்புகள், அக்காலத்தில் புழக்கத்தில் இருந்த அலங்கார/கைவினைப் பொருள்கள் முதலியவை உள்ளன. 1974ல் திறக்கப்பட்ட பண்டிதமணியின் சிலையும் இருக்கிறது.

மண்ணியல் சிறுதேர் என்பது வடமொழியில் சூத்ரகர் எழுதிய புகழ்பெற்ற நாடகமான 'மிருச்சகடிகம்' (Mricchakatika) என்பதன் தமிழாக்கம் ஆகும். பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களால் 1933-ல் மொழிபெயர்க்கப்பட்ட இந்த நூல், வறுமையுற்ற சாருதத்தன் மற்றும் வசந்தசேனை என்ற கணிகையின் காதலைச் சித்தரிக்கும் ஒரு சமூக நாடகமாகும்.

மண்ணியல் சிறுதேர் பற்றிய முக்கிய தகவல்கள்:

- **ஆசிரியர் (மூலம்):** சூத்ரகர் (வடமொழி - மிருச்சகடிகம்).
- **தமிழாக்கம்:** மு. கதிரேசச் செட்டியார் (1933).
- **பொருள்:** 'மிருச்சகடிகம்' என்றால் மண்ணாலான சிறிய தேர் என்று பொருள். நாடகத்தில் வரும் சிறுவன் ஒருவன் மண்ணால் ஆன சிறுதேரை விளையாடும் காட்சி முக்கியத்துவம் வாய்ந்தது.
- **கதைக்களம்:** உஜ்ஜயினி நகரில் நடக்கும் கதை, ஒரு நேர்மையான வணிகன் (சாருதத்தன்) மற்றும் வசந்தசேனை என்ற பெண்மணிக்கு இடையிலான காதலைச் சுற்றியும், அரசியல் சூழ்ச்சிகளைப் பற்றியும் பேசுகிறது.
- **சிறப்பு:** இது சமூக நாடகம் (Prakarana) வகையைச் சேர்ந்தது, இதில் சாதாரண மக்களின் வாழ்க்கை, அரசியல் மற்றும் நீதித்துறை பற்றிய சித்தரிப்புகள் சிறப்பாக உள்ளன.

இந்த நூல் தமிழ் இலக்கியத்தில் மொழிபெயர்ப்பு நாடகங்களுள் மிகச் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.

மண்ணியல் சிறுதேர்

https://tamil.wiki/wiki/%E0%AE%AE%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%A3%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B2%E0%AF%8D_%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B1%E0%AF%81%E0%AE%A4%E0%AF%87%E0%AE%B0%E0%AF%8D

மண்ணியல் சிறுதேர் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் இயற்றிய நாடக நூல். சூத்ரகர் என்ற வடமொழிக் கவிஞர் இயற்றிய *மிருச்சகடிகம்* என்னும் நாடக நூலின் தமிழ் மொழியாக்கம்.

ஆசிரியர் குறிப்பு

மண்ணியல் சிறுதேர் நூலின் ஆசிரியர் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார். சமஸ்கிருதத்திலிருந்து தமிழிற்கு மொழிபெயர்த்த நூல்கள் மூலமும் தமிழில் வடசொற்களின் ஆய்விற்காகவும், சைவ சமய இலக்கியத்திற்காகவும், பழந்தமிழ் நூல்களின் உரைக்காகவும் பண்டிதமணி தமிழிலக்கியத்தில் அறியப்படுகிறார். (பார்க்க மு. கதிரேசன் செட்டியார்)

மூல நூல்

மண்ணியல் சிறுதேரின் மூல நூல் 382 சுலோகங்கள் கொண்ட மிருச்சகடிகம் என்னும் சமஸ்கிருத நூல். மிருச்சகடிகத்தை இயற்றியவர் சூத்ரகர் என்னும் வட இந்திய அரசர்.

மிருச்சகடிகத்தை ஆர்தர். டபிள்யூ. ரைடர் என்பவர் 1905-ல் *The Little Clay Cart* எனும் பெயரில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். சங்கரதாஸ் சுவாமிகள் மிருச்சகடிகத்தை தமிழில் நாடகமாக அரங்கேற்றியுள்ளார்.

நூல் அமைப்பு

மண்ணியல் சிறுதேர் 371 ஆசிரியப்பாக்களால் ஆனது. மூல நூல் 382 பாக்களால் ஆனதாக இருந்தாலும் தமிழில் மொழி பெயர்த்தபோது இரண்டு மூன்று சமஸ்கிருத பாக்களை ஒரே ஆசிரியப்பாவில் அமையச் செய்தமையால் இந்த எண்ணிக்கை குறைந்துள்ளது என நூலின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நாடகம் மிக விரிந்த அளவினதாக உள்ளதால் இதைப் படிப்பவர்களுக்கு பயன்படும் வண்ணம் கதைச் சுருக்கமும் நாடகப் பாத்திரங்களின் பெயர்விளக்கமும் இந்நூலில் உள்ளது. மேலும் ஒவ்வொரு பக்கத்திலும் பாடலுக்கான அடிக்குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன.

இந்நூலுக்கு சுவாமி விபுலானந்த அடிகள் அணிந்துரை வழங்கியுள்ளார்.

பத்து அங்கங்கள்

மண்ணியல் சிறுதேர் பத்து அங்கங்களாக ஆக்கப்பட்டுள்ளது.

- அணிகலன் அடைக்கலம்
- சூதர் நிலை
- கன்னமிடல்
- சருவிலகன் பேறு
- புயன் மறைப்பு
- வண்டி மாற்றம்
- ஆரியகனைக் கோடல்
- வசந்தசேனை துன்பநிலை
- வழக்காராய்ச்சி
- தொகுத்துரைத்தல்

நாடகப் பாத்திரங்கள்

மண்ணியல் சிறுதேர் நாடகத்தில் இடம்பெற்றுள்ள கதாபாத்திரங்கள்;

- சாருதத்தன் - அந்தணன், வணிகன், கதைத் தலைவன்

- தூதை- சாருதத்தன் மனைவி
- உரோகசேனன்- சாருதத்தன் மகன், சிறுவன்
- வசந்தசேனை- கணிகையர் குலப்பெண், கதைத் தலைவி
- இரதனிகை- வசந்தசேனையின் பணிப்பெண்
- மதனிகை- வசந்தசேனையின் தோழி
- மைத்திரேயன்- சாருதத்தனின் நண்பன்
- பாலகன்- அரசன்
- சாகரன்- அரசனின் மைத்துனன், சூழ்ச்சிக்காரன்
- சம்வாகன்- சூதாடி, புத்த துறவியாக மாறியவன்
- சதவிலகன்- மதனிகையின் காதலன், ஆரியகனின் நண்பன்
- ஆரியகன்- இடைக்குல இளைஞன், பாலகனைக் கொன்று அரசாட்சி எய்தியவன்
- வீரகன், சந்தனகன்- அரசனின் காவலர்கள்
- விடன்- சகாரனின் வேலையாள்
- சேடன்- சாருதத்தனின் வண்டிக்காரன்
- நீதிபதி
- மாதுரன், சூதன்- சூதாடிகள்

கதைச் சுருக்கம்

மண்ணியல் சிறுதேர் நாடகத்தின் கதை உஜ்ஜயினி நகரத்தில் நடக்கிறது. வறுமையில் வாடும் வணிகனான சாருதத்தனிடம் கணிகை வசந்தசேனை காதல் கொண்டிருக்கிறாள். அரசனின் மைத்துனன் சாகரன் ஒருநாள் வசந்தசேனையை தீய நோக்கத்துடன் பின் தொடர்கிறான். அவனுக்கு அஞ்சிய வசந்தசேனை சாருதத்தனின் இல்லத்துள் நுழைகிறாள். தன்னிடம் இருந்த பொன்முடிப்பை சாருதத்தனிடம் அளித்துவிட்டுச் செல்கிறாள்.

சாருதத்தன் இல்லத்திலிருந்து சருவிலகன் எனும் கள்வன் பொன்முடிப்பை திருடிச் செல்கிறான். பொன்முடிப்பு களவு நிகழ்ந்ததையறிந்து சாருதத்தன் வருந்துகிறான். தன் மனைவி தூதை தந்த இரத்தினமாலையை மைத்திரேயன் மூலம் வசந்தசேனைக்குக் கொடுத்தனுப்புகிறான்.

இதற்கிடையில், தன் சேடியான மதனிகையை அடிமையினின்றும் மீட்கும் ஆசையால் தன் பொன்முடிப்பை சாருத்தன் இல்லத்தினின்றும் சருவலகன் திருடி வந்துள்ளான் என்று வசந்தமாலை அறிகிறாள். வசந்தசேனையிடம் பொற்பையை அளித்து, மதனிகையை அழைத்துச் செல்கிறான் சருவிலகன்.

அவன் சென்றதும், மைத்திரேயன் வசந்தசேனையைச் சந்திக்கிறான். சாருதத்தன் சூதில் பொற்பணியை இழந்ததாகக் கூறி அதற்கு

மாற்றுப்பொருளாக இரத்தின மாலையைக் கொடுத்துத் திரும்புகிறான் . சாருதத்தன் பெருந்தன்மையை வசந்தசேனை போற்றுகிறாள். காதல் பெருகி, கார்கால இரவில் அவனைக் காணப் புறப்படுகிறாள். சாருதத்தன் இல்லம் அடைந்து பொற்பணியை அவனிடம் காட்டி அங்கேயே தங்கிவிடுகிறாள். அன்றைய இரவு அவர்களுக்கு அமுதாகிறது .

பொழுது விடிகிறது , " யான் விளையாடுதற்கு இம்மண் வண்டி வேண்டாம். பொன் வண்டி வேண்டும்" என்று அழுது கொண்டிருக்கும் சாருதத்தனின் மைந்தன் உரோக சேனனிடம் தன் பொற்பணிகளைக் கழற்றிக் கொடுத்து விட்டுச் சாருதத்தன் தன்னை வரச்சொல்லிக் குறித்திருந்த புட்பகரண்டகம் என்னும் பூஞ்சோலைக்குப் புறப்படச் சித்தமாகிறாள் வசந்தசேனை. சாருதத்தன் வண்டி என்று எண்ணி அப்போது தெருவில் நின்று கொண்டிருந்த சகாரன் வண்டியில் ஏறிவிடுகிறாள். (சாருதத்தன் வண்டியில் அரசனால் சிறை வைக்கப்பட்டுத் தப்பிய ஆரியகன் யாருக்கும் தெரியாமல் ஏறிச்செல்கிறான்) சகாரன் தோட்டத்திற்கு வண்டி வந்ததும் வசந்தசேனை பிழை நேர்ந்ததை உணர்கிறாள். வேதனைப்படுகிறாள். சிறிது நேரத்தில் சகாரன் பார்வையில் படுகிறாள். சகாரன் வசந்தசேனையின் காதலை இரக்கிறான். அவளோ மறுக்கிறாள். உடனே, சகாரன் வசந்தசேனையின் கழுத்தை நெரிக்கிறான். அவள் மயங்கி நிலத்தில் வீழ்கிறாள் . சகாரன், அவள் உடலைச் சருகுகளால் மூடி மறைத்துவிட்டு நீதிமன்றம் சென்று சாருதத்தன் மீது கொலைக்குற்றத்தைச் சுமத்துகிறான். வழக்கு நடக்கிறது. சூழ்நிலை சாருதத்தனைக் குற்றவாளியாக்குகிறது. நீதிபதி அரசன் ஆணைக்கிணங்கிச் சாருதத்தனைக் கழுவேற்றும்படிக் கட்டளையிடுகிறான்.

தண்டனை நிறைவேறும் முன் மூர்ச்சையுற்றுக் கிடந்த வசந்தசேனை (அவளால் சூதர்களிடமிருந்து முன்பு காப்பாற்றப்பட்ட) பௌத்தத் துறவி சம்வாகனால் காப்பாற்றப்பட்டு அழைத்து வரப்படுகிறாள். இதற்கிடையில் சாருதத்தன் வண்டியில் ஏறி அவனிடம் அடைக்கலமாகி ஆதரவு பெற்ற ஆரியகன் பாலகனைக் கொன்று அரசன் ஆகிறான். அவன் செங்கோல் முதன்முதலாகச் சாருதத்தனுக்கு அருள் பாலிக்கிறது. சாருதத்தன் காப்பாற்றப்படுகிறான் . வசந்தசேனையிடம் காதற் பிச்சை கேட்ட சகாரன் சாருதத்தனிடம் உயிர்ப்பிச்சை கேட்கிறான், பெறுகிறான். இறுதியில் வசந்தசேனையும் சாருதத்தனும் ஒன்றாகிறார்கள்.

பதிப்பு

மண்ணியல் சிறுதேர் நூலை சிவபுரி சன்மார்க்க சபை 1933-ம் ஆண்டு முதலில் பதிப்பித்தது.

மண்ணியல் சிறுதேர் ஒரு மதிப்பீடு, கவிஞர் மீரா,

chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://www.tamilvu.org/library/nationalized/pdf/66-kavignarmeera/manniyalsiruthaer.pdf

திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

திருவாசகம்
திருச்சதகம்

மகாமகோபாத்யாய, முதுபெரும்புலவர்பண்டிதமணி
மு. கதிரேசச்செட்டியார் இயற்றிய
கதிர்மணி விளக்கம்
உரைத் தொடக்கம்

https://pandithamani.com/2014/07/13/%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%9A%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D-2/

அருளுரு வாய யானை முகத்தெம்
பெருமுதற் கடவுளின் திருவடி போற்றுதும்
வாதவூரடிகள் மலர்வாய்த் தோன்றிய
திருவாசக மெனுந் தேனின்
இன்சுவை உலகுணர்ந்து இன்புறற் பொருட்டே.

திருவாசகம் என்பது அழகிய தெய்வத்தன்மை வாய்ந்த சொற்களால் ஆகிய செய்யுள் நூல் என்னும் பொருளையுடையதாகும். இது, திருவென்னும் அடையடுத்த வாசகம் என்னும் முதற் கருவியின் பெயர். அதன் காரியமாகிய

செய்யுட்கு ஆயினமையின், கருவி ஆகுபெயராம் என்ப. சிவஞான முனிவரர் பிறர் கொள்கையை மறுக்குங்கால் ஆகுபெயர் என்பதை உடன்பட்டுப்பின் "உண்மையான் நோக்குவார்க்கு அன்மொழித் தொகையாகுமன்றி, ஆகு பெயராகாமையுணர்க"எனவுங் கூறியுள்ளர். திரு என்பது தெய்வத்தன்மை, அழகு என்னும் பொருளுடையதாகும். "திரு கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் என்றது அழகு" என்று பேராசிரியர் உரை கூறினாராயினும், ஈண்டுத் தெய்வத்தன்மை என்று கொள்ளுதல் சிறப்புடைத்தாம், வாசகம் – சொல். இத்திருவாசகத் திருப்பாட்டுக்கள் தெய்வ நலங்கனிந்த சொற்களாலும் சொற்றொடர்களாலும் அமைந்தவை; இனிமை எளிமை ஆழமுடைமை யென்னுங் குணங்கள் தம்பால் அமையப்பெற்றவை; மெய்யன்புடன் ஓதுவார் கேட்பார் உணர்வார் எல்லோரையும் மிக்க பேரின்பத்தில் திளைப்பித்துப் பரவசப்படுத்தும் இயல்பின; அநுபவ உண்மைகளைத் தெளிவுண்டாம்படி விளக்குவன. இத்திருவாசகத்தின் அருமை பெருமைகள் அளப்பரியனவாம். இதனைப் பற்றித் தனித்து ஓர் உரைநடை நூல் எழுத எண்ணியிருக்கின்றோம் ஆதலின், ஈண்டு இம்மட்டில் அமைகின்றாம்.

திருச்சதகம்

திருச்சதகம் என்பது தெய்வத் தன்மை வாய்ந்த நூறு திருப்பாட்டுக்களைத் தன் அகத்துக் கொண்ட ஒரு பகுதி என்னும் பொருளதாம். சதம் என்னும் வட சொற்கு நூறு என்பது பொருள். அந் நூறு எண்களையுடைய திருப் பாட்டுக்களைத் தன்னகத்துக் கொண்டது என்னும் பொருளில், ஓர் இடைச்சொற் புணர்ந்து, சதகம் என்றயிற்று. ஒரு பாட்டின் ஈற்றில் உள்ள சொற்றொடர், சொல், எழுத்து என்னும் இவற்றுள் ஒன்றை அடுத்த பாட்டின் முதலாகக் கொண்டு பாடுதல் அந்தாதித் தொடர் எனப்படும். இவ் வந்தாதித் தொடராகவே இந்நூறு திருப்பாட்டுக்களும் அருளிச் செய்யப்பட்டன. "மெய்தான் அரும்பி" என முதல் திருப்பாட்டின் முதலடி தொடங்கப்பட்டு, "மெய்யர் மெய்யனே" என நூறாம் திருப்பாட்டின் இறுதி முடிக்கப்பட்டமை அறிக.

பத்தி வைராக்கிய விசித்திரம்

பத்தி வைராக்கிய விசித்திரம் என்னும் இத் தொடர் இத் திருச்சதகம் முழுதும் நுதலிய பொருளைப் பற்றியதாகும். இங்ஙனமே பதிகந்தோறும் (சிவபுராண முதலிய நான்கு திருப்பாட்டுக்களையும் திருச்சதகம், நீத்தல் விண்ணப்ப முதலிய பத்துக்கு மேற்பட்ட பல திருப்பாட்டுக்களையுடைய பகுதிகளையும் தனித் தனியே பதிகம் என்று கூறுதல் முன்னையோர் வழக்கு.) அவ்வப் பதிகத்தின் திரண்ட கருத்துக்களையும் கூர்ந்து ஆராய்ந்து பண்டைப் பெரியார் ஒருவர் தலைப்புக் குறிப்பிட்டுள்ளார். இத்தொடர், பத்தி வைராக்கியங்களின் வியக்கத்தக்க பல்வேறு தன்மை யென்னும் பொருளுடையதாகும். பத்தி – இறைவனைக் குறித்து மெய்யடியார் உள்ளத்தில் நிகழும் பேரன்பு. வைராக்கியம் – பற்று அறுதி. விசித்திரம் – வியக்கத்தக்க பல்வேறு தன்மை. ஆளுடைய அடிகள் திருவாசகத்தின் முதல் திருப்பாட்டில் சிவபெருமானது அநாதி முறைமையான பழமையையும், இரண்டாம் திருப்பாட்டில் அப்பெருமானது திருவருட் புகழ்ச்சி முறைமையையும், மூன்றாம் திருப்பாட்டில் அண்டங்கள் எல்லாம் அணுவாக, அணுக்களெல்லாம் அண்டங்களாகப் பெரிதாய்ச் சிறிதாய் நிற்கும் இயல்பையும் அருளிச் செய்துள்ளார். திருப்பாட்டுக்களாலும் இறைவன் இயல்புகளை விளக்கிக் கூறிப் பின் நான்காம் திருப்பாட்டில், உயிர்கள் வினைக்கு ஈடாக மாயையினின்றும் உடல் முதலியன பெற்றுப் பிறக்குமாறும், பிறவும் உணர்த்தியருளினர். அதன் பின் அங்ஙனம் தோன்றிய உயிர்கள் தம் இயல்பையும், தம்மையுடைய இறைவன் இயல்பையும், தம்மைப் பிணித்திருக்கும் கட்டின் இயல்பையும் நூன் முகமாகவும், ஞானாசிரியன் உபதேசமுகமாகவும் தெளிந்து, ஆண்டவன் திருவருட்பேற்றிற்கு ஆளாதலை விரும்பி அதற்குச் சாதனமாகிய மெய்யன்பையும், பற்று அறுதியையும் மேற்கொள்ளல் வேண்டும் என்பதை, இத் திருச்சதகத்தில் அருளிச்செய்வார் ஆயினர். ஆண்டவனை அடைதற்குரிய நெறிகள் பலவற்றுள்ளும் சிறந்தது அன்பு நெறியாகும். "முத்தி நெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப் பத்தி நெறி யறிவித்து" என்று கூறியிருத்தலின், அந் நெறியையே அடிகள் சிறந்ததாகக் கொண்டு கடைப்பிடித்துள்ளார் என்பது தெளிவாம். ஆண்டவனைக் குறித்து அடியார் மேற்கொள்ளும் மெய்யன்பே ஈண்டுப் பத்தியென்று கூறப்படும்.

ஆண்டவனிடத்துப் பத்தியுண்டாகுமாயின்; இவ்வுலக வாழ்க்கையில் உள்ள பற்றுக்களுக்கு ஒழிவுண்டாம். உடல் முதலியவற்றின் நிலையாமையுணர்ந்து அவற்றைப் பற்றி உண்டாய அவாக்களைக் களைதற்கும், இறைவன் திருவடி கூடுதற்கும் மெய்யன்பே சிறந்த சாதனமாகும். அன்பின் இயல்பு பல திறப்படும். அன்பினால் விளையும் செயல்கள் விதிமுறை பற்றியும், விதிமுறையைக் கடந்தும் காணப்படுவனவாம். கண்ணப்ப நாயனார் வரலாறே அதற்குச் சான்றாகும். பற்றறுதியை வைராக்கியமென்று கூறுவர். உலகப் பற்றொழிவும் பலதிறப்படும். செல்வம் இருந்து நீங்கினமை, உற்றார் பெற்றார் முதலியோரால் வெறுக்கப்படுதல் முதலிய காரணங்களாலும், உலகியற் பொருள்களின் நிலையாமையுணர்ச்சி முதலியவற்றாலும் பற்றறுதியுண்டாம் என்ப. இவ்வியல்புகளைக் குறித்தே வியக்கத்தக்க பல்வேறு தன்மை என்னும் பொருள்படப் பத்தி வைராக்கிய விசித்திரம் என்றாயிற்றென்பது. இத்திருச்சதகம் பத்துப் பத்துத் திருப்பாட்டுக்களையுடைய பத்துப் பகுதிகளைத் தன்னுட் கொண்டது. இப் பகுதிகள் பதிகம் என்று கூறப்பட்டிலவாயினும், தெய்வத்தைப் பற்றிப் பெரும்பாலும் பத்துப் பாட்டுக்களாகப் பாடப்படும் பகுதியைப் பதிகம் என்று கூறும் வழக்கு உண்மையான் பதிகம் என்றே ஈண்டு எடுத்து ஆளலானேம். இப்பத்துப் பதிகங்களிலும் பத்தி வைராக்கிய விசித்திரம் என்னும் சதகம் நுதலிய பொருள் விரவியுள்ளதாயினும், ஒவ்வொரு பதிகத்திலும் மெய்யுணர்தல் முதலியனவாகப் பதிகம் நுதலிய பொருள்களும் தனித் தனியாக வுள்ளன. அவற்றை அவ்வப் பதிகத்தின் தலைப்பிற் காணலாம்.

திருப்பெருந்துறைப் புராணத்தில் காணப்படுவனவாகக் குறிக்கப்பட்டுள்ள திருவாசக வுண்மையில், இத்திருச்சதகம் நுதலிய பொருள் பற்றிச் "சத்திய ஞானந்தரு தேசிகர் மோகம் சதகமாம்" என்று கூறப்பட்டுள்ளது. சிவபெருமான் திருப்பெருந்துறையிற் குருந்த மரத்து நீழலில் ஞானா சிரியனாக எழுந்தருளித் தமக்கு ஞானோபதேசம் செய்து மறைந்த பொழுது, அடிகள் அப்பெருமானது பிறிவாற்றாத நிலையில் இஃது அருளிச் செய்யப்பட்டது ஆதலின் "உண்மை ஞானமாகிய மெய்யுணர்வைத் தமக்குக் கருணையுடன் அருளிய ஞானாசிரியன்பால் உள்ள வரம் பிகந்த காதல்

என்னும் கருப்பொருளையுடையது, இத் திருச்சதகம்" என்று கூறியதும் பொருத்தமே.

மெய்யுணர்தல்

மெய்யுணர்தல் என்பது பொய்ப் பொருளாகிய உடல் முதலியவற்றின் நிலையாமை கண்டு நீங்கி, மெய்ப் பொருளாகிய கடவுளை அநுபவ வாயிலாக உணர்தல் என்னும் பொருளுடையதாகும். இனி இறை உயிர் கட்டு என்னும் பொருள்களின் இயல்பை விபரீத ஐயங்களான் அன்றி உண்மையான் உணர்தல் எனினும் ஆம். பொய்யில் புலவர் திருக்குறளில் துறவற இயலில் வீடு பயக்கும் உணர்வாகிய ஞானத்தை, நிலையாமை துறவு மெய்யுணர்தல் அவாவறுத்தல் என்னும் நான்கு அதிகாரத்துள் அடக்கிக் கூறியுள்ளார். அவற்றுள் மூன்றாவதாகிய மெய்யுணர்தல் என்பதற்குப் "பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களான் அன்றி உண்மையான் உணர்தல்; இதனை வடநூலார் தத்துவ ஞானமென்ப" என்று பரிமேலழகர் உரை கூறினர். இறைவன் திருப்புகழ்களைப் பலபடக் கூறித் தம் வேண்டுகோளைப் புலப்படுத்துமுகமாக அடிகள் இப் பதிகத் திருப்பாட்டுக்களிற் புலப்படுக்கப்பட்ட பொருள் இதுவாம் என்பது. உலகம் யாக்கை இளமை செல்வம் முதலியவற்றின் நிலையாமையைப் பேச்சு அளவின் அன்றி உண்மையின் உணர்தல் வேண்டும். இவ்வுணர்ச்சி முதிர முதிர, அழிவின்றி என்றும் நிலையுதலையுடைய பொருள் யாதாகுமென்னும் ஆராய்ச்சியில் தலைப்படல் கூடும். இவ் வாராய்ச்சிக்குச் சிவாகமங்களையும், ஆகம முடிபுகளாகிய சைவ சித்தாந்த நூல்களையும் கருவியாகக் கொண்டு நேர்மையான முறையில் அவற்றின் பொருள்களை அறிதல் நன்றாம். அங்ஙனம் அறிந்த பெரியவர்களோடு அடுத்தடுத்துப் பழகித் தெளிதலும் இன்றியமையாதது. இம்முறையில் ஒழுகின் மெய்ப் பொருளாகிய கடவுளுண்மையைப் பற்றிய தெளிவுண்டாம் என்பது. அடிகள் இவ்வாறு ஒழுகி உணர்ந்தவர் என்பதை,

பற்பல பொருளா யுள்ள பாசமும் அதனை மேவி
உற்பவ பேதமான உடம்புயி ரோடுங்கு மாறும்
அற்புத புத்தி முத்தி யளித்தரு ளாலே மேலாம்
தற்பர னடாத்து மாறும் உணர்ந்தனர் சைவ நூலில்

என்று வரலாற்று நூலாசிரியர் கூறியமையானும் அறியலாம். அடிகள் அமைச்சராய் அரசியல் அதிகாரம் செல்வம் முதலிய இம்மைக்குரிய வெல்லாம் நிரம்பப் பெற்றவராயினும், சமயத் துறையில் சிறு பருவ முதலே தலைப்பட்டிருந்தமையின், பொய்ப்பொருள் கடிந்து மெய்ப்பொருள் தெளிதற்குரிய ஞானமும், மெய்ப்பொருளாகிய ஆண்டவனிடத்துப் பேரன்பும் உடையராய்க் “கூத்தினர் தன்மை வேறு கோலம்வே றாகுமா போல்” அகத்தே கடவுளுணர்ச்சியும் புறத்தே உலகியற் கடமையும் உடையராயினர் என்பது. அகமும் புறமும் வேறு படல் ஒழுக்க நெறிக்குப் பொருந்துமா எனின், உலகியலில் அது கருதத் தக்கதன்றி ஞானம் கைவரப் பெற்றாரைக் குறித்து நினைக்கத்தக்க தன்றாகலின் ஈண்டுப் பொருந்து மென்க. அடிகள் அருளிச்செய்த திருப்பாட்டுக்களின் முகமாகக் கண்ட மெய்யுணர்தல் என்னும் இஃது, இத் திருச்சதகத்தின் உட் பகுதிகளாகிய பதிகம் பத்துனுள் முதற் பதிகம் நுதலிய பொருளாகும். புகழ் மாலையாகிய இப் பதிகத் திருப்பாட்டுக்களில் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பதிகம் நுதலிய பொருளும் சதகம் நுதலிய பொருளும் புலனாதலை உய்த்துணர்ந்து கொள்ளல் வேண்டும். பதிகம் நுதலிய பொருள் ஒவ்வொரு திருப்பாட்டின் இறுதியிலும், சதகம் நுதலிய பொருள் முதல் திருப்பாட்டு இறுதித் திருப்பாட்டுக்களின் இறுதியிலும், இடையிடையேயும் காட்டப்படும்.

உரை முறை

இனி ஒவ்வொரு திருப்பாட்டிற்கும் கருத்துரைத்தல், கண்ணழித்தல் பொழிப்புத் திரட்டல் அகலங்கூறல் என்னும் நான்கு வகையாகக் கொண்டு உரை விளக்கம் செய்யப்படும். அவற்றுள் கருத்துரைத்தலாவது, திருப்பாட்டை அடுத்து அதன் திரண்ட கருத்தையும் முன்னைத் திருப்பாட்டோடு உள்ள இயைபையும் சுருக்கிக் கூறுதலாகும். கண்ணழித்தல் என்பது, பதப்பொருள் சொல்லுதல், பொழிப்புத் திரட்டல் என்பது, மூல பாடத்தின் பதங்களை விட்டு அவற்றிற்குச் சொல்லிய பொருள்களைத் திரட்டிக் காட்டுதல். இவ்விரண்டு வகையும் பதப்பொருள் கூறுமுகமாக அமையும் ஆதலின், விரிவஞ்சிப் பொழிப்புத் திரட்டுதலைத் தனியே கூறினேம் அல்லேம். அகலங் கூறலாவது, திருப்பாட்டின் பொருளைத் தூய்மை செய்தற்கு வினா விடை உள்ளுறுத்தும், ஆற்றன்

முதலியவற்றாலும் குறிப்பாலும் சொற்களின் அமைந்து கிடக்கும் பொருள் நயங்களை விளக்கியும், இன்றியமையாத இடங்களில் மேற்கோள் காட்டியும் விளக்கிக் கூறுதலாகும். இம்மூன்றும் முறையே கருத்துரை, பதவுரை, விளக்கவுரை என உரிய இடங்களில் எடுத்தாளப்படும்.

————————————

திருச்சதகம்
கட்டளைக் கலித்துறை
திருச்சிற்றம்பலம்

1. *மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்*
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே.

கருத்துரை: பத்தி வைராக்கியங்களில் மன மொழி மெய்கள் மூன்றும் ஈடுபடல் வேண்டும். இறைவனை மெய்ப் பொருளென உணர்ந்து மனத்தால் நினைந்தும், மொழியாற் பாராட்டியும், மெய்யால் வணங்கியும் அன்பு செய்தல் பத்தியாம். உலக வாழக்கையைப் பொய்யென உணர்ந்து, அம் முக்கரணங்களாலும் வெறுத்துவிடல் வைராக்கியமாகும். ஆகவே, ஆளுடைய அடிகள் முதலிற் பத்திநிலையைப் புலப்படுத்துவாராய்த் தம் மன மொழி மெய்கள் ஆகிய முக்கரணங்களும் இறைவன் வயப்பட்ட செய்தியை இம் முதல் திருப்பாட்டில் அருளிச் செய்கின்றார்.

பதவுரை: என் மெய்தான் அரும்பி – என் உடல் புளகித்து, விதிர் விதிர்த்து – மிக நடுங்கி, உன் விரையார் கழற்கு – நின் மணம் பொருந்திய திருவடி மலரைக் குறித்து, கை தான் தலை வைத்து – கைகளைத் தலைமேற் குவித்து, கண் நீர் ததும்பி – கண்களில் நீர் நிரம்பி வழிந்து, உள்ளம் வெதும்பிப் பொய் தான் தவிர்ந்து – மனம் வெதும்பிப் பொய்மை நீங்கப்பெற்று, உன்னைப் போற்றி சய சய போற்றி என்னும் – நினக்கு வணக்கம் வெல்க வெல்க வணக்கம் என்று கூறும், கை தான் நெகிழ விடேன் – ஒழுக்கத்தைத் தளரவிடேன், உடையாய் – எல்லாம் உடைய ஆண்டவனே, என்னைக்

கண்டுகொள் – எளியேனாகிய என் இயல்பைக் கண்டு அடிமையாக ஏற்றுக்கொள்வாயாக என்பது.

விளக்கவுரை: அரும்புதல் – முகிழ்த்தல்; மயிர் சிலிர்த்தல். விதிர் விதிர்த்தல் – மிக நடுங்குதல். தமக்கு இனிய தலைவனை நினைந்த துணையானே உண்டாம் அன்பு மேலீட்டால் மயிர் சிலிர்த்தலும் நடுங்குதலும் அடிகளுக்கு நிகழ்ந்தன வென்பது. அன்பிற்கு இடனாகிய பொருளை நினைந்த அளவில் இன்பவுணர்ச்சி யுண்டாதலும், அதன்சத்துவமாக உடம்பில் மயிர் சிலிர்த்தலும், அந் நினைவின் முதிர்ச்சியில் நடுக்கம் உண்டாதலும் இயல்பாதலின், "மெய்தானரும்பி விதிர் விதிர்த்து" என்றார். அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாகிய மெய்ப்பாடுகளுள் நடுக்கமும் ஒன்றாகும். அஃது அன்பும் அச்சமும் காரணமாக நிகழும் என்ப. ஈண்டு அன்பு காரணமாகும். இம் மெய்ப்பாடுகள் காமம் பற்றியும் நிகழுமாதலின், அதனை விலக்குதற்கு, "உன் விரையார் கழற்கு" என்றார். விரையென்னும் அடையால் திருவடி மலர் என்பது பெற்றாம். திருக்கோவையில், "வெற்றியார் கழல்" என்று கூறப்பட்ட இடத்து, "இறைவன் திருவடிகள் எல்லாப்பொருள்களையும் கடந்து நின்றனவாயினும், அன்பர்க்கு அணியவாய், அவரிட்ட நறுமலரான் வெறி கமழும் என்பது போதர, 'வெறியார் கழல்' என்றார்" என்று பேராசிரியர் கூறியதற்கேற்பத் திருவடிகளுக்கு ஏற்றிக் கூறுதலுமாம். கண்ணீர் ததும்புதல், உள்ளம் உருகிய நிலையில் நிகழ்வதாகலின், பின் வரும் உள்ளத்தை ஒட்டிக் கூறப்பட்டது. "வெதும்பல்", உருகுதல் என்னும் பொருட்டு. பொய்மை – மாயா காரியமாகிய பொய்ப்பொருள் மெய்யென்றுணரும் மயக்க வுணர்வு. இதனை, "பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருள்" என்பர் திருவள்ளுவர். இது நீங்கினாலன்றிச் சிவக்காட்சி யெய்தல் அரிதாகலின், "பொய் தவிர்ந்து" என்றார். "போற்றி", ஈண்டு வணக்கத்தைக் குறிக்கும். இனி வணக்கம் கூறுதல் நாவளவின் இருத்தல் ஆகாதென்பார், "பொய் தவிர்ந்து" என்றாரெனினுமாம். "சய சய" வென்பது வெல்க வெல்க என்று வாழ்த்தியபடியாம். இறைவன் வெற்றிக்கு வாழ்த்தாக அங்ஙனங் கூறியது, அடிகள் மேற்கொண்ட சிவநெறியில் வெற்றி குறித்தாம்.

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான்" என்பதும் ஈண்டு நினைக்கத் தக்கது. இறைவனைக் குறித்து வாழ்த்துதல் வணங்குதல் என்னும் இரண்டனுள்ளும் வணக்கமே அடியார்க்குச் சிறந்ததென்பது தோன்ற, "சய சய" என்பதன் முன்னும் பின்னும் வணக்கப்பொருள் குறிக்கும் போற்றி கூறப்பட்டது. கை – ஒழுக்கம். "கையொன்றறிகல்லாய்" என்ற இடத்து, கை யென்பது இப்பொருட்டாதல் அறிக. நெகிழ விடுதல் – சிறிது தளர்த்தல். இத்துணையும் மனம் மொழி மெய்கள் இறைவன் வயப்பட்டமை கூறியபடியாம். "உள்ளம் வெதும்பி, பொய் தவிர்த்து" என்றமையால் மனமும், "போற்றி சய சய போற்றி" என்றமையால் மொழியும், மெய்யரும்புதல் முதல் கண்ணீர் ததும்புதல் ஈறாக உள்ள செயல்களால் மெய்யும் இறைவன் வயப்பட்டன என்பது கருத்து.

அடிகள் தம் ஒழுக்கத்தின் சோர்வின்மையை உயிர்க்குயிராக விளங்கும் இறைவன் அறிய மேற்கொண்டமை தோன்ற "என்னைக் கண்டு" எனவும், முக்கரணமும் இறைவன் வயப்பட்ட இந்நிலையே ஆட்கொள்ளுதற் கேற்றதென்பார் "கண்டுகொள்" எனவும் அருளிச் செய்தனர். "கண்டு கொள்ளல்" என்பது உலகவழக்கில் ஒரு சொன்னீர்மைத்தாய், பெரியோன் ஒருவனைச் சிறியவன் காண்டலில் வழங்கப்படுவது. இங்கே அடிகள் ஆண்டவனை நோக்கிக் கூறியதாகலின் அங்ஙனங் கோடல், ஆண்டான் அடிமைகளின் பெருமைக்கு இழுக்காமென்க. இத் திருச்சதகத்தின் முதல் திருப்பாட்டால் அடிகள் தம் இயல்பு கூறினாராயினும், அடிகளின் அன்பு வடிவத்தை நம்மனோர் நெஞ்சக்கிழியின் ஓவியமாகப் பொறித்து நினைவுகூர்தற்கு இத் திருப்பாட்டு மிகவும் பொருந்தியதென்பது அறிந்து இன்புறத்தக்கது. வடமொழியார் இத்தகைய திருப்பாட்டுக்களைத் தியானசுலோகம் என்ப. அடிகளின் மனம் மொழி மெய்கள் இறைவயப்பட்ட நிலையைக் குறிக்கும் இத் திருப்பாடற் கருத்தே இத் திருச்சதகத்தின் இறுதித் திருப்பாட்டிலும் தெளிவாக்கப்பட்டிருத்தல் அறியத்தக்கது.

"தான்" நான்கும் அசைகள். ஈண்டுள்ள வினையெச்சங்களுள், அரும்பி, விதிர் விதிர்த்து, ததும்பி, வெதும்பி என்பன சினைவினைகள்; ஏனைய முதல்வினைகள். சினை வினைகள் எல்லாம், "அம்முக் கிளவியுஞ் சினை வினை தோன்றிற், சினையொடு முடியா முதலொடு முடியினும்,

வினையோ ரனைய வென்மனார் புலவர்" என்னும் விதிப்படி, "என்னும்" என்ற முதல் வினையைக் கொண்டு முடிந்தன. "உன்னை" என்பதில் நான்கனுருபில் இரண்டாவது மயங்கிற்று.

இதன்கண், மெய் அரும்புதல் முதலியவாகக் கூறப்பட்ட கரணங்களின் செயல்களால் பத்தியும், "பொய் தவிர்த்து" என்றதனால் வைராக்கியமும் பெறப்படுதலின், பத்தி வைராக்கிய விசித்திரம் என்னும் சதகம் நுதலிய பொருளும், பொய் தவிர்த்து முக்கரணமும் ஆண்டவனைப்பற்றி நிகழ்தலே மெய்யொழுக்கமாகும் என்னும் உண்மை பெறப்படுதலின், மெய்யுணர்தலாகிய பதிகம் நுதலிய பொருளும் புலனாதல் அறிக.

2. கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல்
லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே
யிருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்
லாதெங்கள் உத்தமனே.

கருத்துரை: அடிகள் தம் மனம் மொழி மெய்கள் இறைவன் வயப்பட்ட செய்தியை முதல் திருப்பாட்டில் வெளிப்படுத்தி, அக்கரணங்கள் பிறர் வயப்படா என்பதை இத் திருப்பாட்டில் புலப்படுத்து அருளுகின்றார்.

பதவுரை: எங்கள் உத்தமனே இறைவா – அடியேமாகிய எங்கள் தலைவனே இறைவனே, புரந்தரன் மால் அயன் வாழ்வும் கொள்ளேன் – இந்திரன் திருமால் பிரமன் என்னும் இவர்தம் வாழ்க்கையையும் ஏற்றுக்கொள்ளேன், குடி கெடினும் — குடிப்பிறப்பிற்குரிய பெருமை கெட நேரினும், நினது அடியாரோடு அல்லால் நள்ளேன் — உன்னுடைய அடியாரோடல்லாமல் பிறரோடு நட்புக்கொள்ளேன், திருவருளாலே இருக்கப்பெறின் — நின் திருவருளாலே இருக்க நேரின், நரகம் புகினும் எள்ளேன் — நரகத்தின் கண்ணே செல்லினும் அதனை இகழ்ந்து பேசேன், உன்னையல்லாது பிற தெய்வம் உள்ளேன் — உன்னை அல்லாமல் வேறு தேவர்களை மனத்தாலும் நினையேன், என்பது.

விளக்கவுரை: திருமால் பிரமன் வாழ்க்கைகளிலும் இந்திரன் வாழ்வு இன்ப நுகர்ச்சிக்குச் சிறந்ததாகலின் அது முற்கூறப்பட்டது. புரந்தரன் முதலியோர் தம் வாழ்க்கை நலங்களை வலிந்து தர முற்பட்டாலும் விரும்பேன் என்பது தோன்றக் "கொள்ளேன்" என்றார். "கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதனெதிர், கொள்ளே னென்றல் அதனினும் உயர்ந்தன்று" என்று உலகியல் பற்றிக் கூறிய புறப்பாட்டின் கருத்தும் ஈண்டு நினைக்கத்தக்கது. "குடி" ஆகுபெயர். குடிப்பிறப்புப் பெருமை கெட நேருங்கால், தாங்குவோர் யாவராயினும், அவரை நட்புக்கோடல் அப் பயன்கருதித் தகுமாயினும். அங்ஙனம் நட்புக் கொள்ளப்பட்டார் நின் அடியரல்லராயின், அவர் நட்புத் திருவருட்கு விலக்காக நின்று குடிப்பிறப்புக்கு வரும் கேட்டினும் மிக்க கேடுவிளைக்கும் என்பது கருதிக், "குடிகெடினும் நள்ளேன்" என்றார். அடியார் உறவு அக்குடிப் பெருமையினும் சிறந்த பேறு அளிப்பதாகலின், அவ்வுறவையே வேண்டுவேன் என்பதை வலியுறுத்தற் பொருட்டு, "அடியாரொடல்லால் நள்ளேன்" என எதிர்மறை முகத்தாற் கூறினார். திருவருட் பேறுடையார் நரகம் புகுதல் எக்காலத்தும் இன்றென்பது தோன்றப் "புகினும்" என்றார். உம்மை, புகுதலின்மையை விளக்கி நின்றது. ஒரோவழிப் புகநேரினும், ஆண்டிருத்தல் திருவருட்கு உடன்பாடாயின் அவ்விருப்பையும் இகழ்ந்து கூறேன் என்றார். உயர்வு இழிபு நோக்காது யாங்குறினும் இறையருளில் தலைப்படுதல் ஒன்றையே குறிக்கோளாக உடைமையின். "திருவருளாலே" என்புழி, ஏகாரம் தேற்றப் பொருளது; வேறு நலம் பயக்கும் காரணம் யாதாயினும் இழிவாகக் கருதுவேன் என்பது தோன்ற நின்றமையின் "பிரிநிலை" யெனலுமாம். "எங்கள்" என்றது மற்றை யடியாரையும் உள்ளிட்டு.

பிற தேவர்களுக்கு இல்லாத பரம்பொருள் தன்னை சிவபெருமானுக்கு உண்மை கருதி, "உத்தமனே", "இறைவா" எனவும், புரந்தரன் முதலியோர்க்கு அத் தன்மை இன்மை கருதி, அன்னாரைப் "பிற தெய்வம்" எனவும் கூறினர். உத்தமன் என்றதனால் தலைமைத் தன்மையும், இறைவன் என்றதனால் எங்கும் நிறைந்த முழுமுதல் தன்மையும் ஆகிய பரம்பொருட்டன்மை பெறப்படும். தெய்வம் என்றது சாமானிய தேவரைக் குறிக்கும். பிறரெல்லாம் விரும்பும் விண்ணுலக வாழ்க்கையும் மண்ணுலக வாழ்க்கையும் எத்துணைச் சிறந்தனவாயினும், அவற்றை வேண்டேன் என்பார், முறையே "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு" எனவும், "குடி

கெடினும் நள்ளேன் நினதடியா ரொடல்லால்" எனவும், பிறர் விரும்பாத கீழுலக வாழ்க்கை வேண்டாத தொன்றாயினும், ஆண்டிருத்தல் திருவருட்கு உடன்பாடாயின் வேண்டுவேன் என்பார் "நரகம் புகினும் எள்ளேன்" எனவும் கூறினர். அடியாரோடு கொள்ளும் நட்புத் திருவருட் பேற்றிற்கு ஏதுவாகலின், அது மண்ணுலக வாழ்க்கையைக் குறித்த தாகாமை உணர்க. அடிகள் "சிவபிரானையன்றி வேறு தேவரைப் பரம்பொருளாகச் சிறிதும் நினைந்திலேன் என்பார், "உள்ளேன் பிற தெய்வம்" என்றார். "மற்றோர் தெய்வங் கனவிலும் நினையாது" என்று பிறிதோரிடத்துக் கூறியதுங் காண்க.

உள்ளுதல் மனத்தின் செயலாதலின், "உள்ளேன்" என்றதனால் மனமும் இகழ்ந்து கூறுதல் வாக்கின் செயலாதலின், "எள்ளேன்" என்றதனால் மொழியும், வாழ்க்கை நலம் பொறி நுகர்ச்சியாலும், நட்புக்கோடல் புணர்ச்சி பழகுதலாலும் ஆவன் ஆதலின், "கொள்ளேன்" "நள்ளேன்" என்றமையால் மெய்யும் ஆகிய முக்கரணங்களும் பிறர் வயப்பட்டில அறிக. "வாழ்வும்" என்புழிச் சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது.

இதன்கண், "நினதடியா ரொடல்லால் நள்ளேன்" என்றாதனால் பத்தியும், "கொள்ளேன்" "உள்ளேன்" என்பனவற்றால் வைராக்கியமும் பெறப்படுதலின், பத்தி வைராக்கிய விசித்திரம் என்னும் சதகம் நுதலிய பொருளும், "உன்னை யல்லாது பிற தெய்வம் உள்ளேன்" என்றதனால் மெய்யுணர்தல் என்னும் பதிகம் நுதலிய பொருளும் புலனாதல் அறிக.

3. உத்தமன் அத்தன் உடையான்
அடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மால்இவன்
என்ன மனைநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட
ஊரூர் திரிந்துஎவரும்
தத்தம் மனத்தன பேசஎஞ்
ஞான்றுகொல் சாவதுவே

கருத்துரை: தன் மனம் முதலியன பிறர் வயப்படாமல் சிவபிரான் ஒருவனையே பற்றி நிற்கும் என முன்னைத் திருப்பாட்டிற் கூறிய அடிகள், அங்ஙனம் நிகழும் தம் நினைவு சொற்செயல்கள் உலகத்தவர்க்கு

மாறுபாடாகத் தோன்றினும் அந்நிலை மகிழ்ந்து ஏற்கத்தக்கது என்பதை இத் திருப்பாட்டிற் கூறுகின்றார்.

பதவுரை: உத்தமன் அத்தன் உடையான் — தலையாயவனும் தந்தையும் உடையானும் ஆகிய இறைவனுடைய, அடியே நினைந்து உருகி — திருவடியே இடையறாது எண்ணி உள்ளம் உருகி, இவன் மால் என்ன — இவன் மயக்கமுற்றான் எனப் பிறர் கருதும்படி, மத்த மனத்தொடு — களிப்பேறிய நெஞ்சத்தோடு, ஊர் ஊர் திரிந்து — பல ஊர்களிலும் போக்கு வரவு செய்து, மன நினைவில் ஒத்தன ஒத்தன சொல்லிட — என் உள்ளக்கருத்திற் பொருந்தின பொருந்தின செய்திகளை யான் பேச, எவரும் —இந்த நிலையைக் கண்டார் எல்லோரும் , தம் தம் மனத்தன பேச — தங்கள் தங்கள் உள்ளத்தில் தோன்றிய எண்ணங்களை வெளிப்படுத்திச் சொல்ல, சாவது எஞ்ஞான்று — இவ்வுலக வாழ்க்கையினின்றும் ஒழிவடைவது எப்பொழுது? என்பது.

விளக்கவுரை: நினைந்து உருகி என்னத் திரிந்து சொல்லிடப் பேசச் சாதல் எஞ்ஞான்று என முடிக்க. ஏகாரங்கள் இரண்டனுள், முன்னது பிரிநிலையும், பின்னது ஈற்றசையுமாம். "கொல்" அசை நிலை.

உலகத்து அறிவுடைப் பொருள்களை நோக்க, இறைவன் ஆண்டான் எனவும் அவை அடிமை எனவும், அறிவில் பொருள்களை நோக்க, அவன் உடையான் எனவும் அவை உடைமை எனவுங் கூறுப. இம்முறையில் அறிவுடைப் பொருள்களை ஆளும் இயல்புடைமையால் ஆண்டான் என்பது போதர உத்தமன் எனவும், அறிவின் பொருள்களை உடைமையாகக் கொள்ளும் இயல்பினன் என்பது போதர உடையான் எனவும் கூறினர். ஓர் அரசன் புதல்வன் வேடர் சூழலிற் பட்டுத் தன் இயல்பை அறியாமல் வளர்ந்தானாக, நல்லூழ் வயத்தால், "நீ வேட்டுவன் மகனல்லை; உண்மையில் என் புதல்வனாவாய்" என அறிவித்து, அவ்வரசர் அப் புதல்வற்குத் தன் அரசுரிமைச் செல்வத்தை நல்குதல் போல, அடிகள் ஐம்புலமாகிய வேடர் சூழலிற் பட்டுத் தம் இயல்பு அறியாமல் இருந்த நிலையில், கட்டறுக்கும் பருவம் உற்றமையால், "நீ புலனுகர் இன்பம் பெறுதற்கு உரியை அல்லை; உண்மையில் பேரின்பம் நுகர்தற்குரிய என் புதல்வனாவாய்" என மெய்யுணர்வால் அறிவித்து, இறைவன் தன் பேரின்பப் பெருஞ் செல்வத்தை அருளிக் காத்தமை தோன்ற, "அத்தன்"

என்றார். ஆண்டவன் திருவருளை நினைத்தற்கு அவன் திருவடியே அன்றி வேறு பற்றுக்கோடு இன்மையால், "அடியே நினைந்து" எனவும், அந்நினைவின் முதிர்ச்சி தோன்ற, "உருகி" எனவும் கூறினர்.

அடிகள் தம் புறச்செயலைக் கண்ட பிறர், உண்மை யுணராமல் பித்துப்பிடித்து மயங்கினர் என்று கருதும்படி, பல ஊர்களிலும் சிவதரிசன நிமித்தம் போக்குவரவு செய்து, சிவானந்தத் தேறலை மிகுதியாக உண்டு, அக் களிப்பினால் உலகியலை மறந்து தம் உள்ளக் கருத்திற்குப் பொருந்தின பொருந்தினவாகிய மெய்யன்பு மயமான சொற்களைத் தாம் பேசவேண்டும் என்பார், "மாலிவன் என்ன மத்த மனத்தொடு ஊரூர் திரிந்து மன நினைவில் ஒத்தன ஒத்தன சொல்லிட" எனவும், அடிகள் அங்ஙனம் உலகியலை நோக்காமல், இறையருள் வயப்பட்டுத் தம் அநுபவத்திற் கண்ட உண்மைகளை வெளிப்படுத்துக் கூறும் மொழிகளைக் கேட்பார் எல்லோரும் தத்தம் உள்ளங்களில் நல்லனவாகவும் தீயனவாகவும் தோன்றிய கருத்துக்களை வெளிப்படுத்துக் கூறினும் கூறுக என்பார், "எவரும் தத்தம் மனத்தன பேச" எனவும் கூறினர். அடிகள் அருட்செயலைக் கண்டாருள் ஒரு சாரார், அவர் தம் மெய்யன்பின் இயல்பை உய்த்துணர்ந்து, அவ்வுணர்ச்சியால் தம் உள்ளத்துத் தோன்றிய நிகழ்ச்சிகளை வெளிப்படுத்துப் பாராட்டிப் புகழ்ந்து கூறுவர் என்பதும், பிறிதொரு சாரார் உண்மை யுணராமல், புறச்செயலைக் கண்டு, அக் காட்சி காரணமாகத் தம் உள்ளத்துத் தோன்றிய நிகழ்ச்சிகளை வெளிப்படுத்து இகழ்ந்து கூறுவர் என்பதும், "எவரும் தத்தம் மனத்தன பேச" என்னுந் தொடரிற் குறிப்பிற் புலனாதலறிக. புகழ்ந்து கூறுதலையும் இகழ்ந்து கூறுதலையும் குறித்து மனத்தனவெனப் பன்மையாற் கூறினர் என்பது. இங்ஙனம் தம்மைப் புகழ்வாரும் இகழ்வாரும் முறையே நல்வினை தீவினைகளை ஏற்றுக்கொள்ள, அதன் முகமாகத் தமக்கு வினையொழிவு உண்டாக வேண்டுமென்பது அடிகள் கருத்தன்று. "கழிவில் கருணையைக் காட்டிக் கடிய வினையகற்றி" என்றபடி, ஆண்டவன் அருளினால் வினை ஒழிதல் வேண்டும் என்பதே குறிக்கோள். ஆயினும் ஞானநிலை யுடைய பெரியோன்பால் அமைந்து கிடைக்கும் ஆகாமிய கன்மமாகிய நல்வினை தீவினைகள், முறையே அப் பெரியோனைப் புகழ்வார்பாலும் இகழ்வார்பாலும் அடைய, அவற்கு அவ்வினை யொழிவுண்டாம் என்பது அறிவியல் நூலிற் கண்டதாகலின், அம்முறையாலும் அடிகளின் உண்மை

அன்பைக் கண்டு புகழ்ந்து கூறுவார், ஆகாமிய கன்மத்துள் நல்வினைப் பகுதியையும், புறச்செயலைக் கண்டு எள்ளிக் கூறுவார் தீவினைப் பகுதியையும் ஏற்றுக்கொள்ள, வினையொழிவுண்டாம் என்பதும் ஈண்டுக் கருதத் தக்கது. “சாதல்” — ஈண்டுக் கட்டறுத்து உலக வாழ்வினின்றும் ஒழிவு பெருதலைக் குறிக்கும். அடிகள் “சகம்பேயென்று தம்மைச் சிரிப்ப, நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை பூணதுவாகக்” கொண்டு, உலக வாழ்க்கையினின்றும் ஒழிவு பெறுதல் எப்பொழுது வாய்க்குமோ என்பார், “எஞ்ஞான்று கொல் சாவதுவே” என்றார்.

இத் திருப்பாட்டில், “ஒத்தன ஒத்தன சொல்லிட” என்பதும், “தத்தம் மனத்தன பேச” என்பதும் ஆகிய இரண்டனையும் பிறர் கூற்றுக்களாகக் கொண்டு, முறையே உள்ளூராரும் அயலூராரும் அடிகளைக்கண்டு கூறியனவாகப் பலரும் உரை கூறியுள்ளார். உள்ளூரார் அயலூரார் கூற்றுக்களை நினைந்து அடிகள் கூறினாரென்றதில் ஒரு பொருட்சிறப்பின்மையையும், பின்னர் “எவரும் தத்தமனத்தன பேச” என்றதனால், முன்னர் “ஒத்தன ஒத்தன சொல்லிட” என்பது அடிகள் கூற்றென்பது தானே பெறப்படுதலையும் அவர் உணர்ந்திலர். அதனால் அஃது உடையன்றென்பது தெளிக. இதன்கண், உலகத்தவர் புகழ்தலினும் இகழ்தலினும் விருப்பு வெருப்புக் கொள்ளாமல், திருவருள் ஒன்றிலே தோய்ந்து நிற்றல் மெய்யுணர்வின் பயனாம் என்பது பெறப்படுதலின், மெய்யுணர்தல் என்னும் பதிகம் நுதலிய பொருள் புலனாதல் அறிக.

4. *சாவமுன் னாள்தக்கன் வேள்வித்*
தகர்தின்று நஞ்சம் அஞ்சி
ஆவஎந் தாயென் றவிதா
இடுநம் மவரவரே
மூவரென் றேயெம் பிரானொடும்
எண்ணிவிண் ணாண்டுமண்மேல்
தேவரென் றேஇறு மாந்தென்ன
பாவந் திரிதவரே.

கருத்துரை: தம் மனம் முதலியன பிறர் வயப்படாமல் சிவபிரானையே பற்றி நிற்கும் என முன்னர்க் கூறிய அடிகள், அங்ஙனம் பிற தேவர் வயப்படாமைக்குத் தாம் அறிந்த காரணத்தை இத் திருப்பாட்டில் அருளிச் செய்கின்றார்.

பதவுரை: முன் நாள் தக்கன் வேள்வித் தகர் தின்று — முன் ஒரு காலத்தில் தக்கன் என்பான் இயற்றிய வேள்வியில் அவியாகப் பெய்த ஆட்டுக்கடாவின் இறைச்சியைத் தின்றும், நஞ்சம் சாவ அஞ்சி — திருப்பாற்கடலில் எழுந்த பெரு நஞ்சைக் கண்டு சாதற்கு அஞ்சியும், எந்தாய் ஆ! ஆ! என்று அவிதா இடும் நம்மவர் அவரே — எங்கள் தந்தையே ஆ! ஆ! என் செய்வோம்! என்று கதறித் துன்ப முறையீடு செய்யும் நம்மனோராகிய அத் தேவர்களே, எம்பிரானொடு மூவர் என்று எண்ணி — எம்பெருமானாகிய சிவ பரம்பொருளொடு தம்மையும் சேர்த்து மூவராவோம் என்று நினைத்து, விண் ஆண்டு — விண்ணுலகத்தில் ஒரு கூறு ஆட்சி புரிந்து, மண்மேல் தேவர் என்று இறுமாந்து திரிந்தவர் — நிலவுலகத்தில் யாம் முதற்கடவுள் ஆவேம் என்று செருக்கித் திரிந்தவர், என்ன பாவம் — இஃதென்ன தீவினைப் பயன் இருந்தவாறு! என்பது.

விளக்கவுரை: தின்றும் அஞ்சியும் என்று இடும் நம்மவர் எனவும், எண்ணி ஆண்டு என்று இறுமாந்து திரிதவர் எனவும் முடிக்க. தின்றும் அஞ்சியும் என்புழி, எண்ணும்மைகள் தொக்கு நின்றன. “அவரே” “தேவரன்றே” என்பவற்றில் உள்ள ஏகாரங்கள், முறையே பிரிநிலையும், தேற்றமுமாம். திரிதருவர் என்றது ரகர வுகரம் கெட்டு, “திரிதவர்” என்றாயிற்று. தக்கன் சாவ வேள்வித் தகர் தின்றும் என இயைத்து, “சாவ” என்பதைக் காரியப்பொருட்டாக்கலும் ஒன்று. தக்கன் என்பான் வேள்வித் தலைவனாகிய சிவபிரானை வெறுத்து, மற்றைத் தேவர்களை அழைத்து வேள்வி இயற்ற, அவ்வேள்வியிற் கிடைத்த அவியுணவை அன்னார் உண்டதே அவன் அழிவிற்குக் காரணம் ஆயிற்றென்பதாம். அவியுணவு ஏற்குந் தகுதி தமக்கு இன்று என்பதை உணராமல், ஊன்சுவையில் ஈடுபட்டு, அவ்வாட்டு இறைச்சியை உண்டனர் என்பது போதர, அவியேற்றென்னாது, “தகர் தின்று” எனவும், அங்ஙனம் தின்றற்கு முற்படும் இயல்பினர் நஞ்சத்தைக் கண்டுழிப்பின்னிட்டு நடுங்கினரென்பது தோன்ற, “நஞ்சம் அஞ்சி” எனவும் கூறினர். தகர் ஊன் தின்று என்னாது “தகர் தின்” றென்றது,

“யாட்டினின் பாலென மூலமுமாம்” (ஆவின் பாலோ எனக் கருதினார்க்கு, உண்மை உணர்த்தி விலக்க, ஆட்டுப்பால் என்றனராம்; அது கேட்டவர் ஆட்டுப்பால் ஒன்றோ, அதன் மூலமும் ஆகும் என்றனராம். மூலம் ஆட்டு உடல் இறைச்சியைக் குறிப்பதாகும். — பிட்சாடனர் நவமணி மாலை, செ. 4) என்றாற் போல, அவ்விறைச்சி யுண்டலின் வேட்கை மிகுதி குறித்து நின்றது. தக்கன் சிவபிரானை வெறுத்து, அவி தர அழைக்குங்கால், “அப்பெருமான் நம் தந்தையாவரே; அவரை வெறுத்த இடத்தில் நாம் சென்று களித்தல் ஆகாதே” என்று எண்ணாமல் சென்று உண்ட தீச்செயலைக் கண்டு, வீரபத்திரர் ஒறுத்த ஞான்று, அத்துன்பம் பொறாது வருந்தினரென்பதும், அமுதம் பெறக் கடல் கடைந்துழி, நஞ்சு தோன்றிற்றாக, அதற்கு அஞ்சி, அந்நஞ்சினால் தமக்கு ஏதம் விளையாவாறு விரைந்து வெளிப்பட்டுக் காத்தருள வேண்டும் என்று கதறி முறையிட்டனரென்பதும் போதர, “எந்தாய் ஆ ஆ என்று அவிதா இடும்” எனவும், அங்ஙனம் முறையிட்டவர், பாசக் கட்டுடைய மக்களாகிய நம்மை ஒத்தவர் என்பது விளங்க, “நம்மவர் அவரே” எனவும் கூறப்பட்டன.

“ஆவா” என்பது ஆவ எனக் குறைந்து நின்றது. “அவரே” என்பதில் உள்ள ஏகாரம் உயிர்த்தன்மையரே அன்றிப் பிறரல்லர் என்பதைத் தெளிவித்தலால் தேற்றப் பொருட்டாம். “அவிதா” என்பது கேடு நேர்ந்துழிக் கூறப்படும் முறையீட்டுச் சொல். “விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ ஒருவரும், உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் செய்குவாய்” என்று கொற்றவையைப் பரவு முகமாகச் சிவபெருமான் பெருமை கூறப்பட்டது ஈண்டு நினைக்கத்தக்கது. பிரமன் முதலிய தேவர்கள் எல்லாம் மும்மலம் உடைய சகல வருக்கத்தினராதலின், மக்கள் தன்மையராகக் கருதப்பட்டு, “நம்மவரவரே” எனப்பட்டனர்.

வேள்வியிற் பெற்ற ஆட்டிறைச்சியை உண்டற்கு முற்பட்ட தேவர்கள், நஞ்சம் வெளிப்பட்ட பொழுது அதனை அடக்கும் ஆற்றல் இல்லாமையொடு, அதற்கு அஞ்சித் தமக்கு கேடு நேராவாறு சிவபிரானைக் குறித்து, “எங்கள் தந்தையே காத்தருள்க” என முறையிட்டனர் என்னும் இதனால், அன்னார் தலைமைப் பேற்றிற்கு உரியரல்லர் என்பது வெளிப்படையாகும்.

இவ்வுண்மை யறிந்தும், பிரமன் திருமால் உருத்திரன் என்னும் முறையில் சிவபிரானை உருத்திரனாக எண்ணி, அவனோடு தம்மையும் ஒத்த நிலையில் வைத்து எண்ணுதல் அவர் தம் செருக்கைப் புலப்படுத்துவதாகும். இவ்வரிசையில் வைத்து எண்ணப்படும் உருத்திரன், அயன் மாலொடுங் கூடக் குணதத்துவத்தின் வைகிப் பிரகிருதி புவனாந்தம் சங்கரிக்கும் குணிருத்திரனாவான். சுத்த மாயா புவனாந்தம் சங்கரிக்கும் சங்கார காரணனே பரமசிவனாவான். இதனை, "இவ்வேறுபாடுணராது மகாருத்திரனாகிய பரமசிவனைக் குணிருத்திரனாக வைத்தெண்ணுவோரை நோக்கி, 'நம்மவரவரே மூவரென்றே எம்பிரானோடும் எண்ணி விண்ணாண்டு மண்மேல், தேவரென்றே யிறுமாந்து என்ன பாவந் திரிதவரே' என வாதவூரடிகள் இரங்கிக் கூறிய திருவாக்கும் அறிக" என்னும் சிவஞான மாபாடியத்தானும் உணர்க. "தேவரில் ஒருவன் என்பர் திருவுருச் சிவனைத் தேவர், மூவராய் நின்றதோரார்" என்று சிவஞான சித்தியும், "தேவர்கோ வறியாத தேவ தேவன் செழும்பொழில்கள் பயந்துகாத் தமிக்கு மற்றை, மூவர்கோனாய் நின்ற முதல்வன்" என்று பிறிதோரிடத்து அடிகளும் கூறியவற்றானும், பரமசிவன் மூவர்க்குந் தலைவன் என்பது தெளிவாதல் உணர்க.

படைத்து அளித்து அழித்தற்குரிய மூவராலும் விண்ணுலகில் ஒவ்வொரு பகுதி ஆட்சி செய்யப்படுதலின், "விண்ணாண்டு" என்று கூறப்பட்டது. அவ்வாட்சியைத் தொழில் நிலையமாகக் கொள்ளாமல், அதுபற்றி மண்ணுலகில் தாமே பரம்பொருளெனக்கருதிச் செருக்கித் திரிதல் அறியாமையின்பாற் படும் என்பது தோன்ற, "மண்மேல் தேவரென்றே இறுமாந்து திரிதவரே" என்று கூறப்பட்டது. "தேவர்" என்பது ஈண்டு ஒருமைப் பொருட்டு. இதனைத் "தேவர்" என்றது ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி; "மண்மேற் றேவரென்றே இறுமாந்து' என்றார் பிறரும்" என்று நச்சினார்க்கினியர் கூறுதலானும் அறிக. நஞ்சுண்டு காத்த அருட்செயலைக் கண்டு வைத்தும், தம்மைப் பரம்பொருளாக எண்ணி இறுமாந்து திரியும் தேவர் நிலைமை இரங்கத்தக்க தென்பார், "என்ன பாவம்" என்று கூறினர்.

இதன்கண், சிவபெருமானை, மூவருள் ஒருவன் என்பது பொருந்தாது; அம்மூவரையும் இயக்கி ஆளும் தலைவன் என உணர்தல் வேண்டும் என்றது மெய்யுணர்தலாதலின், மெய்யுணர்தல் என்னும் பதிகம் நுதலிய பொருள் புலனாதல் அறிக.

5 தவமே புரிந்திலன் தண்மலர்
இட்டுமுட் டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை
யேன்உனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு எய்திற்றி
லேன்நின் திருவடிக்காம்
பவமே அருளுகண் டாய்அடி
யேற்கெம் பரம்பரனே.

கருத்துரை: சிவ பெருமான் அல்லாதார் பரம்பொருளாகார் என முன்னைத் திருப்பாட்டிற் கூறிய அடிகள், பரம்பொருள் பரமசிவனே யென்பதை உணர்ந்தும், அப்பெருமானை யடைதற்குரிய சரியை முதலிய தவத்தை மேற்கொள்ளாமைக்கு இரங்கி, இனியேனும் அத்தவஞ் செய்தற்குரிய பிறப்பு வேண்டுமென்று இறைவனை நோக்கி இத் திருப்பாட்டிற் கூறுகின்றார்.

பதவுரை: எம் பரம்பரனே — எங்கள் மேலான பரம்பொருளே, உனக்கு அன்பர் உள் ஆம் — உன்பால் மெய்யன்பு மிக்க பெரியார் அகத்துள் உண்டாம், சிவமே பெறும் திருஎய்திற்றிலேன் — வீட்டின்பத்தையே பெறுதற்கு ஏதுவாகிய சிவஞானச் செல்வத்தை அடையப் பெற்றேன். அல்லேன்; தவம் புரிந்திலன் — தவத்தையும் செய்தேன் அல்லேன், நின் திருவடிக்குத் தண் மலர் முட்டாது இட்டு இறைஞ்சேன் — நின்னுடைய திருவடிகளுக்குக் குளிர்ந்த நறு மலர்களைக் குறைவற இட்டு வணங்கேன், அவமே பிறந்த அருவினையேன் — ஆதலின் பயனின்றிப் பிறந்த கடத்தற்கரிய தீவினையுடையேன் ஆயினேன், நின் திருவடிக்கு ஆம் பவமே அடியேற்கு அருளு — ஆதலின் இனி நின் திருவடியை அடைதற்குரிய பிறப்பையே அடியேனாகிய எனக்கு அருளிக் காத்தல் வேண்டும், என்பது.

விளக்கவுரை: அன்பர், உள்ளாம் திரு, சிவமே பெறுந்திரு என இயைக்க. திரு, ஈண்டுச் சிவஞானத்தை யுணர்த்தும்; அது சிவத்தைப் பெறுதற்கு வாயிலாதலின், சிவம் — என்று அழியாத பேரின்பம். ஞானம் மெய்யன்பின்

விளைவாதலின், "அன்பர் உள்ளாந்திரு" எனவும், அது பயப்பது வீட்டின்பம் ஆதலின், "சிவமே பெறுந்திரு" எனவும் கூறப்பட்டன. ஈண்டு ஏகாரம் தேற்றப்பொருட்டு. தவம் ஈண்டுக் கிரியையையும் யோகத்தையும் குறிக்கும். அகத்தும் புறத்தும் வழிபடுதலாகிய கிரியையும், மூச்சுக்காற்றை அடக்கி, மனத்தை அசைவற நிறுத்தி, உயிர் பரத்துடன் ஒன்றுதல் என்னும் அகவழிபாடாகிய யோகமும் தட்பவெப்பங்கள் முதலியவற்றால் உடற்கு உறும் துன்பத்தைப் பொறுத்துச் செய்யத்தக்கனவாதலின், தவம் என்று கூறப்பட்டன. சிவஞான போதம் எட்டாஞ் சூத்திரவுரையில், தவம் என்பது சரியை கிரியா யோகங்களை உணர்த்தும் என்ப. "ஈண்டுத் தவம் எனப் பட்டன பிறவல்ல வென்பார், சரியை கிரியா யோகங்களை எனக் கிளந்துரைத்தார்" என்பது சிவஞான முனிவர் உரை. சரியை முதலிய மூன்றனையும் தவம் என்னுஞ் சொல் உணர்த்துமாயினும், ஈண்டுத், "தண்மல ரிட்டிறைஞ்சேன்" எனச் சரியை வேறாகக் கூறப்பட்டமையால், தவம் என்பது கிரியையையும் போகத்தையும் உணர்த்துவதாகும். மேலும், "சரியை கிரியா யோகங்களை" என்னும் மெய்கண்டார் திருவாக்கிற்கு உரை கண்ட சிவஞான முனிவர், "கிரியா யோகங்கள் என்னும் உம்மைத்தொகை வடநூன் முடிபு; கிரியா யோகம் இரண்டற்கும் தீக்கை ஒன்றென்பது தோன்ற, அவ் விரண்டனையும் தொகுத்தோதிச் சரியையைத் தமிழுக்குரிய வீற்றான் வேறு வைத்தார்" என்று கூறினர். இதனால் விசேட தீக்கை ஒன்றே கிரியை யோகங்களை மேற் கோடற்குரிய தகுதியளிக்கும் என்பது புலனாம். இந்நயம் பற்றித் தவம் என்னுஞ் சொல்லால் கிரியையையும் யோகத்தையும் கோடல் பொருந்தும் என்பதுணர்க. தவமே என்புழி, ஏகாரம் தேற்றப்பொருட்டு என்பது உபலக்கணமாக நின்று வழிபாட்டிற்குரிய ஏனைய உபகரணங்களையும் உணர்த்தும், "முட்டா" தென்பதும் உபகரணப் பொருள்களின் குறைவின்மையை வலியுறுத்துவதாகும். மலர் இட்டு இறைஞ்சுதற்குரியது திருவடியாதலின், அஃது ஈண்டுங் கூட்டிப் பொருள் உரைக்கப்பட்டது.

இறைவனை அடைதற்குச் சைவாகமங்களிற் கூறப்பட்ட நெறி நான்காகும். அவை, சரியை கிரியை யோகம் ஞானம் என்பன. இவை ஒன்றற்கொன்று சாதனமும் சாத்தியமுமாக, இறுதியாகிய ஞானத்தால் வீடடைதல் கூடும். "விரும்புஞ்சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும், அரும்பு மலர் காய் கனி

போல் ஆகும்" என்பர் தாயுமானார். ஞானம் வீடு பயக்கும் உணர்வாதலின், வீட்டிற்கு வாயிலாகிய அதனைப் பெறுதல் இன்றியமையாததாகும். அது பெறுதற்கு அரிதாயிற்றென்பார், "சிவமே பெறுந்திரு எய்திற்றிலேன்" எனவும், அதற்குச் சாதனங்களாகவுள்ள யோகநெறி, கிரியை நெறியாகிய இவற்றையும் அடைந்திலேன் என்பார், "தவமே புரிந்திலன்" எனவும், அவ்வெல்லாவற்றிற்கும் முதற்படியாக வுள்ள சரியையிலேனும் தலைப்பட்டேனோவெனின், அதுவும் இன்றென்பார். "தண்மலரிட்டு முட்டா திறைஞ்சேன்" எனவும் கூறினர். சிறந்த இந் நால்வகை நெறியினும் தலைப்படாமையால் இப்பிறப்புப் பயனற்ற தென்பார். "அவமே பிறந்த" எனவும் இவ் அவப் பிறப்பிற்குக் காரணம், கடத்தற்கரிய என் தீவினை என்பார், "அரு வினையேன்" எனவும் கூறினர். இதுகாறும் பிறப்பறுப்பதற்குரிய நெறி கைவரப் பெற்றிலேன்; ஆதலால் மேலும் பிறப்புண்டாதல் ஒருதலை; இனிக் கிடைக்கும் பிறப்பாவது நின் திருவடியடைதற்குரிய நெறி நிற்றற்கே யன்றி வேறுபடாவாறு அருளல் வேண்டும் என்பார், "நின் திருவடிக்கு ஆம் பவமே அருளு" எனத் தேற்றப் பொருள் தோன்றக் கூறி வேண்டினர். ஈண்டு ஏகாரம் தேற்றப் பொருளது. கண்டாய் என்பது முன்னிலை அசை. பிறப்பு வேண்டத் தக்கதன்றெனினும், சிவ நெறி நின்று, இறைவழிபாட்டில் தலைப்படக் கிடைக்குமாயின், பெரிதும் வேண்டிப் பெறத்தக்கதென்பதை,

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே

என்னும் பெரியார் திருவாக்காலுந் தெளிக.

இதன்கண் சரியை முதலியவைகளே சிவபெருமானை அடைதற்குரிய நன்னெறிகளாம் என்று கூறியிருத்தலின், மெய்யுணர்தல் என்னும் பதிகம் நுதலிய பொருள் புலனாயவாறு அறிக.

செட்டிநாட்டரசரும் கதிரேசனாரும்

கதிரேசனாரிடம் நட்பு கொண்டு பழகியவர்களில் செட்டிநாட்டரசரான அண்ணாமலைச் செட்டியாரும் ஒருவர். கதிரேசனாரிடம் அண்ணாமலைச் செட்டியார் வைத்திருந்த பேரன்பும் பெருமதிப்பும் கதிரேசனாரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பணியை மேற்கொள்ளச் செய்தது. அவரின் விடாப்பிடியான வேண்டுகோளின் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பணி செய்தார். அக்காலத்தில் இவருடன் பணியாற்றியவர் சுப்பிரமணியப் பிள்ளை. பண்டிதமணி பல்கலைக்கழகத்தில் ஆசிரியப் பணியை மேற்கொண்ட போது அவருக்கு வயது 53 ஆகும். முதிர்ந்த அறிவும் பழுத்த அனுபவமும் பாடம் சொல்லும் திறனும் மாணவர்களிடம் மிகுந்த தமிழார்வத்தைத் தூண்டின. இவரிடம் பாடம் கேட்பதற்காகவே சிலர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தனர். இவரிடம் பயின்று பிற்காலத்தில் சிறப்பு பெற்ற சிலர்:

- அ. சிதம்பரநாதச் செட்டியார்
- எஸ். உருத்திரபதி
- மீனாட்சி சுந்தரனார்
- பூ. ஆலால சுந்தரம் செட்டியார்
- சரவண ஆறுமுக முதலியார்
- ஆ. முத்துசிவன்
- வ. சுப மாணிக்கம்
- ரம்போலா மஸ்கரனேசு
- இரா. நெடுஞ்செழியன்
- க. அன்பழகன்
- கோவிந்தராசனார்
- இராசாமணி அம்மையார்
- .இராசரத்தினம் அம்மையார்

தம் தமிழ் புலமையால் அனைவரையும் கட்டிய பண்டிதமணி 1946-ல் உடல் நலக் குறைவால் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வு பெற்றார்.

தன்மானமும் பட்டமும்

தமிழறிவு மிக்க வறுமையில் வாடிய புலவர்களை ஆதரிப்பதில் கதிரேசனார் வள்ளன்மை மிக்கவராக விளங்கினார். இவருடைய மனைவி மீனாட்சி ஆச்சியும் இவரின் பொதுத் தொண்டிற்குத் துணையாய் இருந்தார்.

பண்டிதமணி தன்மானத்தைக் காப்பதில் சிங்கமாக விளங்கினார். இவருக்கு பட்டம் வழங்கிச் சிறப்பிக்க அரசாங்கம் எண்ணியது. 'மகாமகோபாத்தியாயப் பட்டம்' ஒரு குறிப்பிட்ட இனத்தவர்க்கே உரியது என எண்ணி அதற்குப் பதிலாக 'இராவ் பகதூர்' என்ற பட்டம் வழங்க விரும்பியது. அரசியலாரின் குறுகிய நோக்கத்தினையும் அறியாமையையும் அறிந்த பண்டிதமணி 'இராவ் பகதூர்' பட்டத்தை ஏற்க மறுத்தார். இவரின் தன்மானம் காக்கப்பட்டதோடு மட்டுமன்றி, அவரின் துணிவுக்குப் பரிசாக 'மகாமகோபாத்தியாயப் பட்டம்' அவரை நாடி வந்தது.





























(😊)(😊) பண்டிதமணி மு கதிரேச செட்டியார் (😊)(😊)

